விலை சதம் 40 ★ ★ பக்கங்கள்—10

சுவையான ஐஸ்கிறீம் வகைகளுக்கும் காழிப் புரியாணி நூடில்ஸ், பொம்பே சுவீட்ஸ், றிக்கோ பீடா வகைகளுக்கும்
றிக்கோஹோட்டல்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 464

ஈழநாடு
வார மலர்
THE EELA NADU VARAMALAR

"மில்க்வைற் சலவைப்பவுடர்"
துரித சலவைக்கு மில்க்வைற் சலவைப் பவுடர் வாங்கிப் பாவியுங்கள். பல அளவுகளில் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.
ஓர் மில்க்வைற் தயாரிப்பு

மலர் 19 மாசி 16 ரபிஅவ்: 8 ஞாயிற்றுக்கிழமை [27—2—77] இதழ் 17

# 5,9-ம்வகுப்புமாணவர்களுக்கு

# 3000 புலமைப் பரிசில்கள்!

## கல்வி அமைச்சு ஏற்பாடு

கொழும்பு, சனி

5-ம், 9-ம் வகுப்பு மாணவர்களுக்கு வழங்கப்படும்புலமைப்பரிசில்களை அதிகரிக்க கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது.

இந்த மாணவர்களுக்கென 3000புலமைப் பரிசுகளைவழங்க கல்வியமைச்சு முடிவுசெய்துள்ளது. கடந்த வருடத்தை விட 500 புலமைப்பரிசில்கள் இதில் அதிகமாகும்.

கடந்தமுறை நாடுமுழுவதும் 2500 பேருக்கு மாத்திரமே புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

## ஜெயப்பிரகாஷ் ஆஸ்பத்திரியில்

புதுடில்லி, பெப். 26

எதிர்க்கட்சித் தலைவர்களில் ஒருவரான திரு. ஜெயப்பிரகாஷ்நாராயண் சுகயீனம் காரணமாக பம்பாய் ஆஸ்பத்திரி ஒன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளார். உடல் நிலை திருப்திகரமாக இருப்பதாக வைத்திய அறிக்கைகள் கூறுகின்றன.

ஜெயப்பிரகாஷ் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் 3 வாரங்களுக்கு பொது அலுவல்களில் கலந்துகொள்ள முடியாதிருக்கும் என்று அறிவித்துள்ளார். தேர்தலில் ஜனதா கட்சியை ஆதரிக்குமாறு அவர் இந்த அறிக்கையில் கேட்டுள்ளார்.

இன்று சத்திரசிகிச்சை ஒன்று இவருக்கு நடைபெற்றது. ஜெயப்பிரகாஷ் நாராயணுக்கு இப்போது 74 வயது. (ஆ)

## 'நியமனக்குழு முடிவு செய்யும்"

### வேட்பாளர் பற்றிய செய்திக்கு மறுப்பு


யாழ்ப்பாணம், ஞாயிறு

அடுத்த பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பாளர்களாக யார் யாரை நிறுத்துவதென்று கூட்டணியின் வேட்பாளர் நியமனக் குழுதான் முடிவுசெய்ய வேண்டும். இதுவரை இந்த நியமனக்குழு கூடித் தீர்மானிக்கவில்லை."

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர்களில் ஒருவரானதிரு.அ. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்

நேற்றைய 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவந்த செய்தி 'உண்மையல்ல' என்றும் திரு. அமிர்தலிங்கம் மறுப்புத் தெரிவித்தார்.

நியமனக்குழுவிரைவில் கூடி வேட்பாளர் பட்டியலைத் தயாரித்து யார் யார் வேட்பாளர்களாக நியமிக்கப்படுவார்களென்பதை அறிவிக்குமென்றும் அவர் கூறினர்.



யாழ்ப்பாணச் சூழலை வைத்து பிரபலஎழுத்தாளர் காவலூர் ராஜதுரை கதைவசனம் எழுதியுள்ள 'பொன்மணி' திரைப்படத்தில் இப்படிக் கவலையே உருவாகக் காட்சியளிப்பவர் திருமதி பவானி திருநாவுக்கரசு. திரு. முத்தையா ராஜசிங்கம் தயாரித்துள்ள 'பொன்மணி' மார்ச் மாதக் கடைசியில் திரைக்கு வருவாள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## சங்கானை ப.நோ.கூ.ச. வேலைநிறுத்தம் பரவும்?

### இன்று கொழும்பில் ஆலோசனை

சங்கானை, ஞாயிறு

இன்று கொழும்பில் நடைபெறும் அகில இலங்கை கூட்டுறவாளர் சம்மேளனக் கூட்டத்தில் சங்கானை ப. நோ. கூ. சங்க வேலைநிறுத்தம் பற்றி முக்கியமாக ஆராயப்படவிருக்கிறது.

அகில இலங்கை கூட்டுறவு சம்மேளன சங்கானைக் கிளைப் பிரதிநிதி திரு. ரி. இராசரத்தினம், வடபிராந்திய கிளைச் செயலாளர் திரு. எஸ். இராசேந்திரம் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு வேலைநிறுத்தம் பற்றி விளக்குவர்.

இதேவேளையில் வடபகுதியிலுள்ள ஏனைய ப. நோ. கூ. சங்கங்களும் சங்கானை வேலைநிறுத்தத்திற்கு ஆதரவு கொடுக்குமுகமாக வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இது இவ்வாறிருக்க அ. இ. கூ. சம்மேளன தென்னிலங்கைக் கிளைகளும் நடைபெற்றுவரும் வேலைநிறுத்தம் பற்றித் தங்களுக்கு நாளாந்தம் தெரிவிக்கும்படி சங்கானைக் கிளையைக் கடிதமூலம் வேண்டியுள்ளன.

கூட்டுறவு ஊழியர்களின் பிரச்னைகள் தகுந்தமுறையில் திர்க்கப்படாவிட்டால் தாம் எந்த நேரத்திலும் வேலைநிறுத்தத்தை அகில இலங்கை ரீதியில்மேற்கொள்ளத்தயாராகவுள்ளதாகவும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## வாசக நேயர்களுக்கு!

உங்கள் அபிமான பத்திரிகையான 'ஈழநாடு' புதுப்பொலிவுடன் வெளிவருவது உங்களுக்குப் பெருமகிழ்ச்சியைத் தந்திருக்கும் என்பதை நாம் அறிவோம்.

பத்திரிகைத்தாள், அச்சுவேலைகளுக்கான பொருட்கள், மற்றும் இன்னோரன்ன செலவுகள் யாவும் பன்மடங்கு அதிகரித்துவிட்டபோதிலும் மிகவும் சிரமத்துடன் இதுவரை காலமும் இந்தப் பளுவை நாம் சமாளித்துவந்துள்ளோம். ஆனால்இப்பொழுது நிலைமை கட்டுக்கு மீறி இனியேலும் தவிர்க்கமுடியாது என்ற கட்டத்தை அடைந்துள்ளது.

எனவே, 1-3-1977-ம் திகதி தொடக்கம்'ஈழநாடு' தினப்பதிப்பின் பிரதியொன்றின்விலையை -/40 (நாற்பது) சதமாகவும், வாரமலர் பிரதியொன்றின் விலையை -/50 (ஐம்பது) சதமாகவும் அதிகரிப்பதென்று முடிவுசெய்யப்பட்டுள்ளது. தவிர்க்க முடியாத இந்த விலை அதிகரிப்பை வாசக நேயர்கள் சகித்துத் கொண்டு தொடர்ந்தும் எப்பொழுதும்போல் ஆதரித்து வருவீர்கள் என்று நம்புகின்றோம்.

— ஆசிரியர் —

### ராஜ்ய சபை கூடுவதை எதிர்க்கும்

## தி. மு. க. மனு நிராகரிப்பு

சென்னை, பெப். 26

இந்திய ராஜ்யசபைக் கூட்டம் நடத்துவதை ஆட்சேபித்து தி. மு. க. உறுப்பினர் ஒருவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த 'ரிட்' மனுவை நீதிமன்றம் இன்று தள்ளுபடிசெய்தது. தி. மு. க. வைச் சேர்ந்த க. லட்சுமணன் என்பவர் இந்த 'ரிட்' மனுவை தாக்கல் செய்திருந்தார்.

தமிழ்நாட்டில் ஜனாதிபதி ஆட்சியை நீடிப்பதற்காகவே அரசியல்நோக்குடன் ராஜ்ய சபை கூடவிருக்கின்றதென்றும் லோகசபைகலைக்கப்பட்ட நிலையில் ராஜ்யசபை கூட்டம் நடத்தலாகாது என்றும் இந்த மனுவில் அவர் குறிப்பிட்டிருந்தார். ராஜ்யசபை நிரந்தரமானதொரு அமைப்பு லோகசபை கலைக்கப்பட்டிருந்தபோதிலும் ராஜ்யசபை கூடுவது தடுக்கப்படமுடியாதுஎன்றும் உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

# யாழ்லயன் களியாட்டு விழா-77

*(யாழ். புற்றுநோய் ஆஸ்பத்திரி நிதிக்காக)*

1977-ம் ஆண்டு பங்குனி மாதம் 9-ம் திகதி பிற்பகல் 4 மணிக்கு முன்னர் பிரவேசக் கூப்பன்களை இணைச் செயலாளர் திரு. இ. ஆர். ஜோசேப், 484, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

## கீழ்க்காணும் பிரவேசக் கூப்பன்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்களே ஏற்றுக் கொள்ளப்படும்.

1977-ம் ஆண்டு பங்குனிமாதம் 19-20-ம் திகதிகளில் நடைபெறும் யாழ். லயன் கழக முதலாவது களியாட்டுவிழா போட்டிகளில் கீழ்க்குறிப்பிடும் விளையாட்டுப் போட்டிக்கு என்னையும் ஒரு போட்டியாளராகப் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

போட்டியில் பங்கு பற்றித் தகுதியுடையேன் என்பதை உறுதிப்படுத்தி போட்டியில் பங்கு பற்றுவதன் மூலம் எனக்கு அல்லது எனது சொத்துக்கு ஏற்படும் காயம் அல்லது சேதத்துக்கு நானே முழுப் பொறுப்பாளி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு ஏற்படும் எவ்விதமான காயம் அல்லது சேதத்திற்கு விழா நிர்வாகிகள் அவர்களின் பிரதிநிதிகள் அல்லது நியமிக்கப்பட்ட அதிகாரிகள் எவரும் பொறுப்பாளிகளாகமாட்டார்கள் என்றும் அவர்களிடமிருந்து எந்தவிதமான நஷ்டஈடும் கோரமாட்டேன் என்பதையும் நான் உறுதிப்படுத்துகிறேன்.

போட்டி நிகழ்ச்சிகள் சம்பந்தப்பட்ட சகல விதிகளுக்கும் கட்டுப்பட்டு நடப்பேன் என்பதையும் உறுதிப்படுத்துகிறேன். போட்டியில் நீதிபதிகளின் தீர்ப்பே இறுதியானதாகும்.

ஒவ்வொரு போட்டிக்கும் தனித்தனியே கூப்பன்களை போட்டியாளர்கள் அனுப்பவேண்டும்.

## போட்டி நிகழ்ச்சிகள்

*[1] வர்த்தக ஊர்திகள் பவனி, [2] கைத்தொழில் ஊர்திகள் பவனி, [3] விவசாயஊர்திகள் பவனி, [4] பழைய மோட்டார் வாகன பவனி, [5] அலங்கார பவனியில் விநோதஉடை தரித்தோர் காட்சிகள், [6] மாணவர் அணிவகுப்பும் 'பாண்ட்' வாத்தியப் போட்டியும், [illegible] வயதிற்குட்பட்ட சிறுவர்களின் விநோத [illegible]போட்டி, [8] 90 மைல் மரதன் சயிக்கிள் ஓட்[illegible]யாவில் இருந்து யாழ்ப்பாணம் வரை [9] [illegible]வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கு 25 மைல் சைக்கிள் ஓட்டம், [10] 5 மைல் யுவதிகள் சைக்கிள் ஓட்டம், [11] 26 மைல் மரதன் வீதியோட்டம், [12] நீச்சல் போட்டி, [13] படகோட்டப்போட்டி, [14] கராட்டிப் போட்டி, [15] யாழ். ஆணழகன்போட்டி, [16] மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி. [17] யாழ்.அழகு ராணிப் போட்டி;*

இந்த பதினேழு போட்டிகளிலும் கலந்துகொள்ளும்விண்ணப்பதாரர் அனைவரும் வடமாகாணத்தில் வசிப்பவர்களாக இருக்கவேண்டும். 18வது போட்டிக்காக இடம்பெறவுள்ள வாணவேடிக்கைப் போட்டியில் அகில இலங்கை ரீதியாகப் பங்குபற்றலாம்.

நிகழ்ச்சி ..................................
*(பெரிய எழுத்துக்களில்)*

பெயர்: ..................................

விலாசம்: ..................................

வயது: ......................

விளையாட்டுப்போட்டி நிபந்தனைகளுக்கு சம்மதித்துப் போட்டி நீதிபதிகளின் முடிவை ஏற்றுக்கொள்வேன்.

..............................
போட்டியாளரின் கையொப்பம்

போட்டியாளர் 21 வயதுக்குட்பட்டவராக இருப்பின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் உறுதிப்படுத்த வேண்டும்.

போட்டி நிபந்தனைகளையும், விதிகளையும் நான் மேற்கண்ட போட்டியாளருக்கு விளக்கிக் கூறியுள்ளேன். அவர் பங்கு பற்றுவதில் எனக்கு ஆட்சேபமில்லை.

பெற்றோர் அல்லது பாதுகாவலர்
ஒப்பம்

..........................................

கலை நிகழ்ச்சிகளாக (1) நாதஸ்வரம், (2) பரத நாட்டியம், (3) மெல்லிசை, (4) வில்லுப்பாட்டு, (5) குட்டி நாடகங்கள், (6) யோகாசனம், (7) பொப் இசை, (8) லிம்போ நடனம், (9) பெல்லி நடனம், (10) மாயா ஜாலக் காட்சி, (11 மெய்வல்லுநர் காட்சி (இலங்கையின் பல மெய்வல்லுநர் பங்குபற்றுவது).

மேற்படி நிகழ்ச்சிகளில் பங்குபற்ற விரும்பும் எந்தத் தனி நபரோ அல்லது பாடசாலையோ, கழகங்களோ விண்ணப்பங்களை இவ்வருடம் பங்குனி மாதம் 9ந் திகதிக்கு முன் அமைப்புச் செயலாளர், 484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

### விற்பனைக்கு

ஒரு கரையாலும், கேரதீவு வீதி மூலமாகவும் உட்புறம் உள்ள 44 ஏக்கர் தென்னம் தோட்டம் விற்பனைக்குஉண்டு. மேலதிகவிபரங்களுக்கு இ.சவரிமுத்து, 16, டேவிற் வீதி, யாழ்ப்பாணம். 5542

தெல்லிப்பளையில் புகையிரத நிலையம், பஸ் இஸ்ராண்ட், ஆஸ்பத்திரி, பாடசாலை ஆகியவற்றிற்கு அருகாமையில் சகல வசதிகளுடனும் (மின்சாரம், தண்ணீர்ப் பைப்) வீட்டுடன் கூடிய 4½ பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: 88/3, பருத்தித்துறைவீதி, யாழ்ப்பாணம். 5565

## சித்திரத்தேர் வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு யாழ்ப்பாணம் வண்ணை கடைத்தெரு வேம்படி சித்தி விநாயகர் கோவில் சித்திரத் தேர் வெள்ளோட்டவிழா அடுத்தமாதம் 2ம் திகதி புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவிருக்கிறது. இத் தேர் அராலியூர் க. சின்னத் தம்பி ஆசாரியார் தலைமையில் அவரது புதல்வர் திரு. அமரசிங்கம் ஸ்தபதி குழுவினரால் அமைக்கப்பெற்றது.

3-ம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்குப் புதிய சித்திரத்தேரில் விநாயகப்பெருமான் வீதிஉலாவருவார். (அ)

# சிறுவிளம்பரம்

### விற்பனைக்கு

வவுனியா ஸ்ரேசன் றோட்டில் அரசாங்க தச்சுவேலை தொழில்நிலையத்திற்கு முன் 10 பரப்புக்காணி கிணறு,மின்சார வசதிகளுடன் விற்பனைக்குண்டு. ஆனந்தமூர்த்தி, மின் பொறியியலாளர்,மாநகர சபை, யாழ்ப்பாணம். 5536

### தேவை

சகல கடிகாரங்கள் திருத்துவதில் அனுபவமிக்கவர்தேவை. நேரில் தொடர்புகொள்ளவும்: தேவதாசன், கமலா வாச் வேர்க்ஸ், காங்கேசன்துறை. கிளை: மெயின்வீதி, தெல்லிப் பளை. 5569

தேவன்ஸ் சியாக்காய்பவுடர் மற்றும் தேவன்ஸ் தயாரிப்புகள் தயார் செய்வதற்கு பெண்பிள்ளைகள் தேவை. தேவன்ஸ் இன்டஸ்றீஸ், 67, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 5548

றோயல் டிஸ்பென்சறிக்கு ஆங்கில அறிவுள்ள பெண் உதவியாளர் உடன் தேவை. நேரில் வரவும். ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 5555

### தேவை

வைத்தியசாலைக்கு வேலை செய்யக்கூடிய 18-25 வயதுக்குட்பட்ட பெண் தேவை. ஆங்கிலம் ஓரளவுக்கு எழுத, பேச தெரிந்திருப்பது நன்று. விரும்பியவர்கள் விண்ணப்பிக்கலாம் அல்லது ஞாயிறு, புதன் தவிர்ந்த எல்லா நேரங்களிலும் சந்திக்கலாம். பாக்கியம் வைத்தியசாலை, கரம்பன் கிழக்கு, ஊர்காவற்றுறை. 5553

### வாடகைக்கு

பெரிய கல்வீடு, விசாலமான பகுதி வீட்டுடன். 19, கடைச்சாமி வீதி, நீராவியடி. 5571

மாநகரசபை எல்லைக்குள் வருமானங்கள் உள்ள நவீன வசதிகளுடன் வீடு வாடகைக்குண்டு. விபரம்: டாக்டர் அருளம்பலம், காட்டுக்கந்தோர் ஒழுங்கை, சுண்டிக்குளி. 5541

### வகுப்புகள்

N.C.G.E.க்கான ஆங்கிலம் பேச்சுமொழி, N. C. G. E. எண்கணிதம், தூய கணிதம். விபரத்திற்கு: D. T. நைல்ஸ், 100, அம்பலவாணர் வீதி, அத்தியடி,யாழ்ப்பாணம். 5545

### கல்வி

G.A.Q., G.S.Q., B.A. வகுப்புகள், சட்டக் கல்விப் பட்டப் படிப்பு முதல் பரீட்சை (L.L.B.) வகுப்புகள் வாரந்தோறும் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெறும். உயர்கலைக் கல்லூரி ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 5557

G. C. E. (O/L), G.C.E. (A/L) கலை, விஞ்ஞானம்,வர்த்தகம் இரசாயனம், பௌதிகம், தாவரவியல், விலங்கியல் முதலிய பாடங்களுக்கு செய்முறைப் பயிற்சியும் (Practical) அளிக்கப்படும். விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்: உயர் கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். [வித்தியா பகுதியினரால் அங்கிகரிக்கப்பட்ட சிரேஷ்ட பாடசாலை] 5558

## சினிமாத்தயாரிப்பாளர்களுக்கு!

தரமான தமிழ்ப்படம் இலங்கையில் தயாரிப்பவர்களுக்கும், தயாரிக்க விரும்புபவர்களுக்கும் கதைகள் கதைவசனங்கள் அமைத்துக்கொடுக்கலாம். தொடர்பு கொள்ளவும்.

R. மதியழகன்,
312, ஆஸ்பத்திரிவீதி,
யாழ்ப்பாணம்.

5574

## திருத்தம்

முல்லைத்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்
வெற்றிடம்
பொதுமுகாமையாளர் தரம் III

20-2-77 ஈழநாடு வாரமலர்ப் பத்திரிகையில் பிரசுரமான மேற்படி பதவிக்கான விளம்பரத்தில் விண்ணப்ப முடிவு திகதி 18-3-77 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

தலைவர்
22-2-77 5560

## கொப்பரு விற்பனையாளர்களுக்கு!

எமது இடத்தில் வைத்து ஒரு பாரம் (5 அந்தர்) 800/-படி நம்பர் 1 (A grade) கொப்பரு கொள்வனவு செய்கின்றோம். மற்றும் 2-ம் நம்பர் கொப்பருக்களை 1-ம் நம்பரிலிருந்து 50/- 1பாரமும் 3-ம் நம்பர் கொப்பருக்களை 80/- 1பாரமும் கழித்துக் கொள்வனவுசெய்கின்றோம். மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

கொள்வனவு முகாமையாளர்

சி. எஸ். கே. ஸ்தாபனம்

யாழ்ப்பாணம்.

5575

## 'மெற்றலிக்ஸ்'
### கணித உபகரணங்கள்

(Metalix Mathematical Instruments)

மொத்தமாகவும் சில்லறையாகவும எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

மொத்த விலை:

சாதாரணம் டசின் ரூ. 93-24
விசேஷம் " ரூ. 137-70

## சீடில்ஸ் லிமிட்டெட்

[யாழ்ப்பாணம்]
151, மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம்.
போன்: 507
5543

## சூராவத்தை முத்துமாரி அம்மன்கோவில்

அதிர்ஷ்ட சீட்டு

சூராவத்தை முத்துமாரி அம்மன் கோவில் 16-2-77ல் நடைபெற்றகட்டிடநிதி அதிர்ஷ்டப் பற்றுச்சீட்டு பரிசு பெற்றவர்கள் இலக்கங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 1061 | 11 | 2197 | 21 | 2990 |
| 2 | 3435 | 12 | 2179 | 22 | 4078 |
| 3 | 7 | 13 | 2710 | 23 | 1808 |
| 4 | 290 | 14 | 4704 | 24 | 2430 |
| 5 | 994 | 15 | 2262 | 25 | 4653 |
| 6 | 3836 | 16 | 354 | 26 | 2303 |
| 7 | 1438 | 17 | 1611 | 27 | 1642 |
| 8 | 64 | 18 | 3282 | 28 | 3291 |
| 9 | 4003 | 19 | 3810 | 29 | 3020 |
| 10 | 3747 | 20 | 4512 | 30 | 2978 |

ஷை கோவில் பரிபாலனசபை

சி. சிவசுப்பிரமணியம்,
தலைவர்.
5573

## எவர்சில்வர் சமையல் பாத்திரம்

கிடைக்குமிடம்:

சென்ற்அந்தனீஸ்
ஹார்ட்வெயர் ஸ்டோர்ஸ்
லிமிட்டெட்
516,ஸ்கின்னேர்ஸ் றோட்
தெற்கு
கொழும்பு-10

# துரித பயன் தரும் முதலீடுகள்

ரூபா 10,000/-

2 வருடங்களில்
ரூபா 12,676/-ஆக
வளர்கிறது

3 வருடங்களில்
ரூபா 14,404/-ஆக
அதிகரிக்கிறது

4 வருடங்களில்
**ரூபா 16,418/-ஆக**
உயர்கிறது

5 வருடங்களில்
**ரூபா 19,070/-**
ஆகிறது

விவேகமாக

முதலீடு

செய்யுங்கள்

---

## புதிய சேமிப்பு முதலீட்டுத்திட்டம்

உங்களுக்குத் தேவையானது மாதம் ரூபா 50/- மட்டுமே

இந்த சிறிய தொகையுடன் நீங்களும் ஒரு முதலீட்டாளராகி
இலாபகரமான வட்டி விகிதத்தை சம்பாதிக்கலாம்

உறுதியானது! பாதுகாப்பானது! நிலையானது!

## த (F)பினன்ஸ் கொம்பனி லிமிட்டெட்,

191, மின்சார நிலைய வீதி — யாழ்ப்பாணம்.

தொலைபேசி:- 7680

எப்படி எப்படியோ · போகிறார்கள்:

# நான் இப்படித்தான் இந்தியா சென்றேன்!

இந்தியா என்றுசொன்னவுடன் மகாத்மா காந்தி, நேருஜி, ராஜாஜி, இந்திரா காந்தி, அறிஞர் அண்ணா, கருணாநிதி, எம். ஜி. ஆர். மட்டுமல்ல நெடிதுயர்ந்த இமயமலையும், வானுயர்ந்த ஆலயங்களும் கோபுரங்களும், தலவிருட்சங்களும் புண்ணிய நதிகளும் கூடவே நினைவுக்கு வருகின்றன.

ஞானம் வளர்ந்த அந்த நாட்டை ஒருதடவை தரிசித்துவிட்டுவரவேண்டுமென்ற ஆர்வம் என் நெஞ்சில் பல காலமாகவே இருந்துவந்தது. இந்த ஆர்வத்தை காரியாலயத்துக்கு வந்திருந்த அன்பர் ஒருவர் மேலும் வளர்த்துவிட்டார்.

ஏற்கனவே வந்திருந்த பாஸ்போர்ட்டுடன் ஒரு ஞாயிற்றுக்கிழமை இரவு தபால் ரயிலில் கொழும்பு புறப்பட்ட இந்த அன்பர், திங்கட்கிழமை காலையில் விசாவுக்கு விண்ணப்பித்து அன்று மாலையிலேயே அதனைப் பெற்றுக்கொண்டுஇரவு தபால் ரயிலில் யாழ்ப்பாணம்திரும்பி, செவ்வாய்க்கிழமை இந்தியப் பயணத்துக்கான ஏற்பாட்டைக் கவனித்து புதன்கிழமை காலையில் பலாலி ஊடாக இந்தியா சென்று வியாழன் இராமேஸ்வரம் ஊடாக மன்னார் வந்தடைந்ததாக இந்திய விஜயத்தை மிகவும் சுலபமாகக் முடித்துவிட்டார்.

என்னிடமும் 1975-ம்ஆண்டு பெறப்பட்ட அனைத்துலக பாஸ்போர்ட் இருந்ததினால் நானும் நினைத்த மாத்திரத்தே தமிழ்நாடு ஸ்தலங்களைத் தரிசித்துவிட்டுத்திரும்பிவிடலாம்என்று 'கோட்டை' கட்டியதில் தவறில்லையல்லவா?

எனது இந்த ஆசைக்கு சுருதி வைத்தாற்போல், கிரேக்க நாட்டுக் கப்பல் ஒன்றில் பணிபுரியும் எனது இளைய சகோதரரிடமிருந்து தந்தி ஒன்று வந்தது. தமது கப்பல் ஈரானிலிருந்து புறப்பட்டு பம்பாய் துறைமுகத்தை வந்தடையவிருப்பதாகவும், அங்கு என்னைச் சந்திக்க விரும்புவதாகவும் எழுதியிருந்தார்.

புதன்கிழமை இந்தியா சென்று வியாழக்கிழமைஇங்கு திரும்பியதாககாரியாலயத்தில் சந்தித்த அந்த அன்பர் கூறிய கதையை 'இரைமீட்டு'க் கொண்டபடி 'களத்தில்' இறங்க முடிவுசெய்தேன். தம்பியாரைப் பம்பாயில் பார்த்துவிட்டு எனது மனைவியுடன் அப்படியே 'ஜம்'என்று தமிழ்நாட்டு ஆலய தரிசனங்களையும் முடித்துக் கொண்டு திரும்ப முடிவுசெய்தேன்.

ஒரு செவ்வாய்க்கிழமை இரவு தபால் ரயிலில் கொழும்பு சென்று புதன் கிழமை காலையில் 'பாஸ்போர்ட்' ஆபீஸ் போய் சிலரின் 'கைகால்களைப்பிடித்து' அன்றுமாலையிலேயே மனைவிக்கு அவசரகாலச் சான்றிதழைப் பெற்றுக்கொண்டேன்.

மறுநாள் காலை 10 மணிக்கு முன்னராக இந்தியத் தூதுவராலயத்தில் விசாவுக்கு விண்ணப்பித்தால் மாலை 5-30 மணிக்கெல்லாம் விசா தந்துவிடுவார்கள் என்று 'விஷயமறிந்தவர்கள்' சொல்லித்தந்தார்கள். இதன்படி அங்கு சென்று மனைவிக்கும் எனக்கும் விசாவுக்கு விண்ணப்பித்தேன்.

அங்கு எனக்கு ஏற்பட்ட அனுபவம் இரண்டே நாட்களில் இந்தியாசென்று திரும்பிய அந்த அன்பர் கூறியதிலும் நேர்மாறாக இருந்தது.

பத்திரிகைக்காரன் என்றில்லாமல் வேறெந்தத்தொழிலைச் செய்பவராக இருந்திருந்தாலும் உடனடியாக விசா கிடைத்திருக்கும் என்ற விஷயம் அப்போதுதான் தெரியவந்ததும் ஒருபுறம் வேதனையாகவும் மறுபுறம் பெருமையாகவும் இருந்தது.

பத்திரிகையாளர்களுக்கு உள்ள மதிப்பை நினைத்து மகிழ்ச்சியடைந்தேன்!

நான் ஒரு பத்திரிகையாளன் என்ற ஒரேஒரு காரணத்துக்காக எனது விண்ணப்பத்தை பரிசீலனை செய்யவேண்டும் என்றுஇந்தியத்தூதுவராலயம் கூறிவிட்டது. இந்திய மத்திய அரசு பாதுகாப்பு அமைச்சின் முன் அனுமதியுடன்மட்டுமே வெளிநாட்டுப்பத்திரிகையாளர்கள் அந்த நாட்டுக்குள் அனுமதிப்பது என்பது நடைமுறைச் சட்டம் என்று அவர்கள் விளக்கம்தந்தனர்.

பம்பாய்துறைமுகத்தை வந்தடைந்துள்ள எனது தம்பியின் கப்பல் இன்னும் நான்கு-ஐந்து நாட்களில் புறப்பட்டுவிடுமே என்று எனது பிரயாண அவசரத்தை தகவல் பகுதி முதலாவது செயலாளர் திரு. இராமநாத ஐயர் அவர்களைச் சந்தித்து எடுத்துக்கூறினேன். 'பிரயாணத்தின் உண்மையான நோக்கம் என்ன?' என்று என்னிடம் வினவினார் அவர்.

''பல வருடங்களாக நாட்டுக்கு வெளியில் இருக்கும் தம்பியாரைபம்பாயில்பார்த்துவிட்டு தொடர்ந்து தமிழ்நாடு ஸ்தலங்களைத் தரிசிப்போம்'' என்று நான் சொன்னேன். 'இந்தியாவில் தங்கியிருக்கும் காலத்தில் அரசியல் தலைவர்களையோ கலைஞர்களையோ சந்திக்கமாட்டேன்' என்றவாறு உறுதிமொழியை எழுத்தில் தரும்படி கேட்டுப் பெற்றுக்கொண்ட அவர்எனது விண்ணப்பம்பற்றி டில்லி அரசுக்கு 'டெலக்ஸ்' மூலம் அறிவித்துவிரைவில் அனுமதிபெற முயற்சிப்பதாக ஆறுதல் சொல்லிஅனுப்பி வைத்தார்,

இந்திய அரசு இவ்வித சங்கடங்களை பத்திரிகையாளர்களுக்குத்தரும்என்று ஏற்கனவே அறிந்திருந்தால் எனது உண்மையான தொழிலை மறைத்திருக்கலாம் என்று எண்ணத் தோன்றியது.

ஜனநாயகத்தைப் பேணுவதில் ஆசியாவிலேயே முதலிடம் வகிப்பதாகக் கருதப்படும் பாரத அரசு பத்திரிகையாளருக்கு 'விசா' வழங்குவதில் ஏன் இவ்வளவு 'பிகு' பண்ணவேண்டும் என்றுதான் எனக்குப்புரியவில்லை.

டில்லியிருந்து மறுமொழி கிடைக்க எப்படியும் அடுத்த செவ்வாய்க்கிழமை மட்டில் செல்லும் என்று திரு. இராமநாத [illegible] டார். அன்று வியாழக்கிழமை தொடக்கம் செவ்வாய்வரை கொழும்பில் முகாம் அடிப்பது என்பது இலேசான காரியமா? அன்று மாலையே இரவு வண்டியைப்பிடித்து யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தேன்.

ஆரம்பத்திலேயேஎனக்குஏற்பட்ட இந்த ஏமாற்றம் பிரயாணத்தைத் தொடர்வதுபற்றித் தீர்க்கமாகச் சிந்திக்க வைத்தது. தம்பியின் கப்பல் பம்பாய் துறைமுகத்தைவிட்டுப் புறப்படும்திகதியை நிச்சயப்படுத்திக்கொள்ளும் வகையில் 40 ரூபா செலவுசெய்து தம்பிக்கு தந்தியொன்று கொடுத்தேன். அடுத்த திங்கட்கிழமைவரை பதில்கிடைக்காதது மேலும் ஏமாற்றத்தையே தந்தது.

ஆயினும் விசா பெறும் முயற்சியைக் கைவிடவில்லை. திங்கள் மாலையில் இந்திய தூதுவராலயத்துடன் தொடர்புகொண்டு ''இந்தச் சர்வதேச பத்திரிகையாளனுக்கு'' இந்திய அரசு அனுமதி தந்துவிட்டதா என்று வினவினேன். அனுமதி கிடைத்துவிட்டதென்று அற்புதமான, மகிழ்ச்சியான செய்தி கிடைத்தது!

### ஊசித்துவாரத்தில் ஒட்டகம்

விசா எடுப்பது கல்லில் நார் உரிப்பது போல என்றால், விமானத்திற்கு டிக்கட் எடுப்பது ஊசித்துளைக்குள் ஒட்டகத்தை நுழைப்பதுபோல! நினைத்த கணத்தில் சிலர் திருச்சியில் குதித்து அடுத்த விமானத்தில் வந்துசேர்ந்து விடுவதையும் நான் அறியாமலில்லை. இது எப்படி நடக்கிறது என்று இப்போது நினைத்தாலும் புரிவதாயில்லை.

### ஏயர் சிலோனில் 15 நாட்கள்

நான் சுத்தமாக 15 நாட்கள் யாழ்ப்பாணத்திலுள்ள

(9-ம்பக்கம் பார்க்க)

எஸ். கே. காசி

### முள்ளம் பன்றியின் பாதுகாப்பு

முள்ளம்பன்றி எதிரியைக் கண்டதும் பயத்தினால் தன் உடம்பை சிலிர்த்துக்கொள்கின்றது. அப்பொழுது அதன் உடம்பிலுள்ள முட்கள் குத்திட்டு நிற்கின்றன. தாக்கவரும் மிருகம் தயங்கி ஒதுங்கி விடுகின்றது.

முள்ளம்பன்றி தன்னைத் தாக்கவரும் மிருகத்தின் மீது தன் முட்களை விசிறியடித்து எதிர்த்தாக்குதல் நடத்தும் என்பது தவறான கூற்று. திடீரென உடம்பை சிலிர்த்துக் கொள்ளும் போது சில வேளை ஓரிரு முட்கள் கழன்று பறக்கலாம். ஆனால் முட்கள் எல்லாமே இவ்வாறு கழன்றுவிடுமானால் தாக்கும் மிருகத்துக்கு மிக வசதியாகப்போய் விடும்.

பசியாற்றிக்கொள்ள வேறு வழியில்லாது போனால் தவிர புலி, வேங்கை போன்ற மிருகங்கள் முள்ளம்பன்றியை ஏறெடுத்தும் பார்ப்பதில்லையாம்.

---

வண. மிரொன் வின்ஸ்லோவும் அவரது துணைவியார் ஹரியட் வாட்ஸ் வோர்த் வாத்ரோப்பும் 1820-ம் ஆண்டு பெப்ரவரி 4-ம் திகதி யாழ்ப்பாணம் வந்தனர். 1833 ஜனவரி 14-ம் திகதி மரணமாகும்வரை திருமதி வின்ஸ்லோ தம் கணவருடனிருந்து சமயப்பணிகளிலும் ஈடுபட்டு உழைத்துவந்தார். இருவரும்உடுவில்பகுதியிலேயே பெரும்பாலும் கவனம் செலுத்திவந்துள்ளனர். இங்கு இவர்கள் பெண்களுக்கான ஒரு பாடசாலையையும் நிறுவினார்கள்.

வண. மிரான் வின்ஸ்லோ தனது மனைவியாரைப் பற்றி எழுதிய நினைவுக் குறிப்புகள் மிகச் சுவையானவை. இருவரும் இலங்கை வந்து சேர்ந்த காலம் தொட்டுத் தினமும் இடம் பெற்ற சம்பவங்களையும் கண்டு கேட்ட விவரங்களையும் குறிப்புகளாக எழுதியுள்ளனர்.

1820-ம் ஆண்டு பெப்ரவரி 17-ம் திகதி யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த அன்று அவர்கள் எழுதிய குறிப்பு இங்கே தரப்படுகின்றது.

19, 20-ம் நூற்றாண்டுகளில் இலங்கைக்கு விஜயம் செய்த யாத்திரிகர்கள் எழுதியுள்ள குறிப்புகளையும் படங்கள் மற்றும் விவரங்களையும் சேகரித்து பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த திரு. எச். ஏ. ஐ. குணத்திலக்க வெளியிட்டுள்ள 'அமெரிக்கர் பார்வையில் இலங்கையின் காட்சிகள்'(Images of Sri Lanka through American Eyes.) என்ற நூலில் இருந்து இது எடுக்கப்பட்டது.

அமெரிக்காவின் 200-வது ஆண்டு சுதந்திரக் கொண்டாட்டங்களின் போது இலங்கையைக் கௌரவிக்கும் நோக்குடன் இலங்கையிலுள்ள அமெரிக்க தகவல் பகுதியினர் இந்த அருமையான நூலை வெளியிட்டுள்ளனர். —பேனு

''17-ம் திகதி வியாழக்கிழமை இன்று காலை நாங்கள் யாழ்ப்பாணப் பட்டம் வந்து அடைந்தோம். உடனேயே நாங்கள் திரு. மூயாட்டின் காலியாக இருந்த வீட்டுக்குச் சென்றோம். அவர் இன்னும் வந்துசேரவில்லை. நண்பர்கள் எமக்கு வாகன வசதி செய்யும் மட்டும் அங்கிருக்கப் போனோம். விரைவாகவே திரு. மீக்ஸ் அவர்களைச் சந்திக்கும் மகிழ்ச்சிகரமான சந்தர்ப்பம் கிடைத்தது. எங்களை அழைத்துச்செல்ல அவர் வந்திருந்தார். அவருடன் திருமதி டிறிபேர்க்கின் வீட்டுக்குச் சென்றோம். அவர் தெய்வ பக்தியுள்ள ஒரு விதவை. அங்கு நாம் காலைச் சாப்பாட்டையும் வைத்துக் கொண்டோம். நல்லூரில் தேவாலயத்தைச் சேர்ந்த திரு. நைட் அவர்களைக் கண்டோம். அன்று மாலை வட்டுக்கோட்டைக்குப் புறப்படவிருந்த கட்டத்தில் திரு. புவர் தெல்லிப்பழையிலிருந்து வந்து சேர்ந்தார். இந்த அன்புக்குரிய சகோதரரைச் சந்தித்ததில் நாம் பெரு மகிழ்ச்சி கொண்டோம். இவரது பணிகளைப் பற்றி அறிந்து அவர் மீது அன்பு செலுத்தலானோம். அவருடன் மிக நெருக்கமாகப் பழகிவந்தோம்.

### அதுவே ஒரு தீவுதான்!

யாழ்ப்பாணம் என்றும் அழைக்கப்படுகின்ற இந்த மாவட்டம் இல[...] யில் வடக்கு எல்லை[...] விளங்குகின்றது. அதுவே[...] தீவுதான். நீளம் சுமார்[...] மைல், அகலம் சுமார்[...] மைல் கொண்டது. [...] அருகில் பல தீவுகள் கா[...] படுகின்றன. இவை எ[...] மாக 1,200 சதுர[...] விஸ்தீரணம். இங்கே 147[...] மக்கள் வாழ்கிறார்கள். [...] களில் 650 பேர் வெள்[...] என்று கணிக்கப்படுகின்[...] அதாவது (இவர்களில் ஒ[...] ஆங்கிலக் குடும்பங்களைத்[...] மற்றவர்கள் அனேகமாக[...] சாங்கத்துடன் தொ[...] கொண்டவர்கள்.) போர்த்துக்கேய வம்சா[...] னர். இலங்கையின் ஏனைய[...] களைப்போலவேஒருவிகித[...] அளவு முஸ்லிம்களும் [...] றார்கள். இவர்கள் [...] வாக வணிகர்களாகவும் [...] கானிக்குகளாகவும் மா[...] ளாகவும் காணப்படுகிறா[...] பல ஆயிரக்கணக்கான [...] கத்தோலிக்கர்களும் [...] றார்கள். உள்ளூர் வாசி[...] சில புரட்டஸ்தாந்து [...] தவர்களும் இருக்கிறார்க[...]

### இந்துக்களில் இரு பிரிவு

ஒரு சிலரைத் தவிர உ[...] மக்கள் சிவனை வணங்கு[...] வினர்களாவர். சிலர் [...]

# அமெ[...] யாழ்[...]

---

கலையுலகத் தொடர்புகள்— 12

# எம். ஜி. ஆரை அழைத்து[...] தமிழகம் சென்றேன்!

மக்கள் திலகம் எம். ஜி. ஆர். அவர்களை இலங்கைக்கு வரவழைக்க முயற்சிஎடுத்தவர்கள் பலர். எம். ஜி. ஆர். எங்கே வரப் போகிறார் என்று பந்தயம் கட்டியவர்களும் உண்டு. அவரை வரவழைத்துவிட்டால் ஆயிரம் பொன் கொடுப்பேன் என்றவர் பலர். அவருக்கு வரும்படி எழுதியவர் பலர். 'நாங்கள் கூப்பிட்டால் தான் வருவார்' என்று கூறியவர்கள் பலர். 'எங்கள் சங்கம் தான் அவரின் சங்கம் எங்களுக்குத் தெரியாமல் எம். ஜி. ஆர். இலங்கை வரமாட்டார்' என்றவர்கள் சிலர். 'யார் கூப்பிட்டால் எம். ஜி. ஆர். இலங்கைக்கு வருவார்' என்று ஆராயத் தொடங்கினர் சிலர்.

ஒரு பிரபல நடிகரையோ நடிகையையோ வரவழைக்க வேண்டுமானால் ஏற்படும் செலவு; அந்தச் செலவைச் சமாளிக்கக்கூடிய ஒரு ஸ்தாபனம் வேண்டும். எல்லா ஸ்தாபனத்தாலும் அந்தப் பொறுப்பையேற்று நடத்த முடியுமா? இப்படிப் பல பிரச்னைகள் இருக்கும்பொழுது பலரும் பலவிதமாகப் பேசி நேரத்தைக் கழித்தார்கள். இச்சமயத்தில்தான் என் மனைவி ஒரு தினசரிப் பத்திரிகை நடத்திவந்த சினிமாப் பத்திரிகை ஒன்றில் சேர்ந்தார். சேர்ந்த நேரத்தில் எம். ஜி. ஆரை இலங்கைக்கு வரவழைக்கும் எண்ணமும் அந்தப் பத்திரிகை நிறுவனத்திற்கு உதயமாயிற்று. அவர்களுக்கு பத்திரிகை விளம்பரத்தைப் பெருக்குவதோடு தங்கள் சம்பாத்தியத்தையும் கூட்டிக் கொள்ளலாம் என்பது முழு நோக்கம். எம். ஜி. ஆர். ஒரு விளம்பர புருஷர் மட்டுமல்ல வசூல்காரரும் கூட என்பதும் அவர்களுக்குத் தெரிந்ததே. அதனால் யாரைப் பிடித்தால் எம். ஜி. ஆரை வரவழைக்கலாம் என்று சிந்தித்தார்கள். அச்சமயத்தில் என் மனைவியைக் கூப்பிட நான் போக, அப்பொழுது என்னைக் கண்ட விளம்பர முகாமையாளர் 'இவர்தான் இதற்கு ஏற்ற ஆள்' என்று நிர்வாக ஆசிரியரிடம் சொல்ல அவர் என்னைத் தேடிவர. நான் அவரோடு பேச, பேச்சோடு நிற்காமல் நான் செயல்படவேண்டுமென அவர் என்னைத் தூண்ட, நான் சென்னைக்குப் பயணமானேன். சென்னையில் எம். ஜி. ஆரை சந்திப்பது லேசான காரியமா; என்ன?

ஆனால் எனக்கென்னவோ லேசாகத்தான் இருந்தது. எம். ஜி. ஆரைக் காணவேண்டும் என்று எந்த ஸ்ரூடியோவிலும் என் பெயரைச் சொன்னால் உடனே கதவு திறக்கப்படும். முதல் சந்திப்பில் எம். ஜி. ஆருக்கு எல்லாவற்றையும் விளக்கூறினேன். அவர் அதற்குச் சம்மதித் நாலும் தான் மட்டு[...] வதிலும் பார்க்கத் தன்[...] இன்னமொரு நடிகை[...] தால் எடுப்பாக [...] கும் என்று நம்[...] நடிகை துணையாக வ[...] எடுப்பாக இருக்குமென[...] ஜி. ஆர். நினைப்பதில் ஏது[...] மம் இருக்குமோ என்று[...] கள் நினைத்தால் நான்[...] கென்ன சொல்ல முடியு[...]

### சரோஜாதேவி மறுத்தார்

எம். ஜி. ஆர். யா[...] தன்னோடு வரவழைக்க[...] கிறார் என்பதை எ[...] இலகுவில் ஊகிக்க[...] தாக இருந்தது. அவ[...] அந்தச் சமயத்தில் [...] கமான படங்களில் [...] வந்தவர் சரோஜாதேவி[...] னால் அவரைத்தான் [...] தன்னுடன் வரவழை[...] என்று நான் ஊகித்ததி[...] வித பிழையுமிருக்க[...] அவர் சரோஜாதேவி[...] அழைத்துக்கொ[...] போவோம் என்று கூ[...] நான் அதற்குச் ச[...] தேன். ஆனால் எம். ஜி[...] சார்பிலும், பத்திரிகை[...] வனத்தின் சார்பிலும்[...] ருக்கு அழைப்பை [...] போது முதலில் ச[...] தேவி மறுத்துவிட்டா[...]

எஸ். பி. மயில்வாகனன்

# 1820ம் ஆண்டில்

# அமெரிக்கர் பார்வையில் யாழ்ப்பாண நகரம்!

...வட்டம் இலங்கை ...க்கு எல்லையாக ...ன்றது. அதுவே ஒரு ... நீளம் சுமார் 40 ... அகலம் சுமார் 15 ...காண்டது. அதன் ...ல தீவுகள் காணப் ...ன. இவை எல்லா ...1,200 சதுரமைல் ...ம். இங்கே 147,671 ...ாழ்கிறார்கள். இவர் ...) பேர் வெள்ளையர் ...ணிக்கப்படுகின்றது. (இவர்களில் ஒரு சில ... குடும்பங்களைத் தவிர ...ள் அனேகமாக அர ...டன் தொடர்பு ...வர்கள்.) டச்சு ...க்கேய வம்சாவழியி ...கையின் ஏனையபகுதி ...லவேஒருவிகிதாசார ...ஸ்லிம்களும் வாழ்கி ... இவர்கள் பொது ...ரிகர்களாகவும் மெக் ...ளாகவும் மாலுமிக ...காணப்படுகிறார்கள். ...க்கணக்கான ரோமன் ...க்கர்களும் வாழ்கி ...உள்ளூர் வாசிகளில் ...ட்டஸ்தாந்து கிறிஸ் ... இருக்கிறார்கள்.

...களில்

...ரிவு

...ரைத் தவிர உள்ளூர் ...வனை வணங்கும் பிரி ...வர். சிலர் விஷ்ணுவை வணங்குவார்கள். பிராமண முறைப்படி இந்தக் கடவுள்கள் பிரமாவையும் சேர்த்து இந்துமத மும்மூர்த்திகளாவர். பிரமாவுக்குக் கோவில் கிடையாது.

தனது சொந்த மகளுடன் முறைதவறி நடந்துகொண்டதால் ஏற்பட்ட சாபத்தினால் அவருக்கு கோயில் இல்லை. ஆனால் பிராமணர்கள் தங்களின் தினசரி மந்திரங்களில் அல்லது பிரார்த்தனைகளில் அவருக்கு விண்ணப்பம் செய்கிறார்கள். இது மீண்டும் மீண்டும் கூறப்படுகின்றது. அதைக் கூறும்போது எரிக்கப்பட்ட சாணத்திலிருந்து எடுக்கப்பட்ட சாம்பலை இவர்கள் நெற்றி, கை, மார்பு போன்றவற்றில் பூசிக்கொள்கிறார்கள்.

விஷ்ணு வணக்கம் பரவலாக இருக்கின்றது.

ஜெகநாதர், ராமன், கிருஷ்ணன் போன்ற அவரது விசேஷ அவதாரங்களின்படி வணங்கப்படுகின்றது. இந்த வணக்கம் பெரும்பாலும் தென்னிந்தியாவைவிட வட இந்தியாவிலேயே அதிகமாகக் காணப்படுகின்றது. இலங்கை இந்துக்கள் பொதுவாக சிவனை வணங்குபவர்கள். இந்தக் கடவுளுக்கு இரு புதல்வர்கள். இவர்களில் கணேசர் அல்லது பிள்ளையார். நான்கு கைகளும் யானைத் தலையும் கொண்டு எலியின் மீது சவாரி செய்யும் தடித்த மனிதன் போல் இவர் காட்டப்படுகின்றார்.

ஸ்கந்தா அல்லது கார்த்திகேயா என்பவருக்கு ஆறு தலைகள். பன்னிரண்டு கைகள், இவர் இரு பக்கங்களிலும் ஒவ்வொருமனைவிமாரை வைத்துக் கொண்டு மயிலின் மேல் அமர்ந்திருக்கிறார். இவர்கள் இருவருக்கும் யாழ்ப்பாணத்தில் சிவனைவிட அதிகமாகப் பல கோயில்கள் உண்டு. சிவாவின் மனைவியான துர்க்கா அல்லது பார்வதிக்கும் நல்லவர் கெட்டவர் என்ற அவதாரங்களின்படி கோயில்கள் உண்டு.

## நகரத்தின் அழகுக்காட்சி

கடல்மார்க்கமாக சிறு தீவுகளிலிருந்து போகும்போது யாழ்ப்பாணப்பட்டண நகரம் மிக ரம்மியமாகக் காட்சியளிக்கின்றது. இடது பக்கம் மேற்குப்புறமாக திறமாகக் கட்டப்பட்ட பெரிய கோட்டை காணப்படுகின்றது. இதற்குள் பல பொதுக் கூடங்கள் இருக்கின்றன. இவைகளில் ஒன்று பழைய டச்சு ஆலயம். அதன் கோபுரம் கோட்டைக்குவெளியிலும் தெரிகின்றது. வலது பக்கம் அல்லது கிழக்குப் பகுதியில் தான் நகரம் காணப்படுகின்றது. மைதானமும் இடுகாடும் கோட்டையையும் நகரத்தையும் பிரிக்கின்றன. அதன் தெருக்கள் நேராகவும் நேர் கோணங்களாகவும் அமைந்துள்ளன. அவை புழுதிபடிந்து கிடக்கின்றன. வீடுகள் பொதுவாக தாழ்வானவை. ஒரு மாடி மட்டுமே உண்டு. ஆனால் உள்ளும்புறமும் செப்பனிடப்பட்டுசுண்ணாம்பு பூசப்பட்டுள்ளன. முன்பக்கம் சுத்தமான விறாந்தைகள் உண்டு. சிலவீதிகளில் நிழல் மரங்கள் உண்டு. நகரமும் உள்ளூர் வாசிகள் வசிக்கும் பகுதிகள் முதல் பனை மரச் சோலைகள் வரை நீண்டு கிடக்கின்றன. இவை தெருக்களில் சூடேறிக்கிடக்கும் மணலுக்கும், வெயிலில் பளிச்சிட்டுக்கொண்டிருக்கும் வீடுகளுக்கும் மாறான ஒரு பசுமையைக்காட்டிக்கொண்டு இவை வானோங்கி நிற்பது மனதுக்கு இதமான காட்சியாகும்.

## டச்சுக்காரரும் போர்த்துக்கேயரும்

இலங்கை டச்சுக்காரர்களின் கையிலிருந்தபொழுது இந்த நகரம் குறித்து அவர்கள் பெருமைப்பட்டுக்கொண்டார்கள். ஆனால் அதன் பெரும்பகுதி அழிந்துவிட்டது. ஆங்கிலேயர் முற்றுகையிட்டதும் டச்சுக்காரர்களில் முக்கியக் குடும்பங்கள் பட்டாவியாவுக்குப் போய்விட்டன. அதனால் எஞ்சியிருந்தவர்கள்ஏழைகளாகிவிட்டனர். போர்த்துக்கேயரின் வழித்தோன்றல்கள் உள்ளூர் வாசிகளைப்போலவே கறுப்பாக இருக்கின்றனர். ஏழ்மையிலும் கெட்டநடத்தைகளிலும் உழல்கிறார்கள். சில சமயம் அவர்களுக்கும் கீழான நிலையில் இருக்கிறார்கள்.

## தமிழர் வீடுகள்

நாட்டுப் பகுதியில் தமிழர்களின் வீடுகள் ஒரு சிலவற்றைத் தவிர யாவுமே குடிசைகள் தாம். நடுவில் ஒரு திறந்த மண்டபம். குறுகிய கூரைகளை கப்புகள் தாங்குகின்றன. அவைகளைவிசிறிபோன்ற பெரிய பனைமர ஓலைகள் அல்லது தென்னம் கிடுகுகள் மூடியுள்ளன நான்குமண்சுவர்கள் 40 அல்லது 50 சதுரஅடி நிலத்தைஉள்ளடக்குகின்றன. இந்தக் கூரைகள் சுவருக்கு வெளியில் நான்கு அல்லது ஐந்து அடிகள் கொண்ட ஒரு விறாந்தாவை ஏற்படுத்துகின்கின்றன. உள்பக்கமும் அகலத்தில் அதேமாதிரிஇரட்டை அளவில் மத்தியில் திறந்த மாடத்தை நோக்கியவாறு ஒரு சிறு தாழ்வானஉப்பரிகையொன்று காணப்படுகின்றது. இங்கே தரைப்பகுதி இறுக்கமான மண் அல்லது செங்கல் மூலம் தளவரிசை அமைக்கப்பட்டுள்ளது. இது பூமியிலிருந்து இரண்டு அல்லது மூன்று அடி உயரத்தில் அமைக்கப்படுகின்றது. வெளி விறாந்தா உட்கார்ந்திருப்பதற்கும், வேலைசெய்வதற்கும் சில யமயம் படுப்பதற்கும் பயன்படுத்தப்படுகின்றது. உள்பக்க விறாந்தை சில சமயம் இரண்டாகப் பிரிக்கப்படும். இதில் ஒன்றில் வீட்டின் முக்கிய பெறுமதியான பொருட்கள் போட்டு அடைக்கப்பட்டிருக்கும். ஆனால் அநேகமாக இவை திறந்தே இருக்கும். சில சமயம் தற்காலிகமாகப் பிரிக்கப்பட்டிருக்கும். இது தான் குடும்பத்தின் வரவேற்பறை சாப்பாட்டறை படுக்கையறை யாவும். இரண்டு மூன்று தலைமுறையினரைக்கொண்டது இக்குடும்பங்கள். குடும்பத்தின் நெருக்கமான பல குடும்பக்கிளைகளும் இங்கே இருக்கும். இங்கு மாலை நேரங்களில் ஒரு புகை கக்கும் விளக்கின் அருகில் குடும்பத்தினர் கூடிப் பேசிக்கொண்டிருப்பர். இப்படியான குடும்ப சந்திப்புக்கள் குறைவுதான். இவர்

(9-ம் பக்கம் பார்க்க)

...ந்துவர

...நான் மட்டும் வரு... பார்க்கத் தன்னோடு ...ாரு! நடிகை வந் ... எடுப்பாக இருக் ...ன்று நம்பினார். ...துணையாக வந்தால் ... இருக்குமென எம். ...னைப்பதில் ஏதும் மர் ...குமோ என்று நீங் ...ந்தால் நான் அதற் ...சொல்ல முடியும்.

...தேவி

...ார்

... ஆர். யாரைத் ... வரவழைக்க நினைக்

...கனன்

...பதை என்னால் ... ஊகிக்கக்கூடிய ...ந்தது. அவரோடு ...சமயத்தில் அனேக ... படங்களில் நடித்து ... சரோஜாதேவி. அத ...ரைத்தான் அவர் ...ன் வரவழைப்பார் ...ன் ஊகித்ததில் எவ் ...ழையுமிருக்கவில்லை. ...ரோஜாதேவியையும் ...துக்கொண்டு ...ம் என்று கூறியதும் ... அதற்குச் சம்மதித் ...னால் எம்.ஜி. ஆர். ..., பத்திரிகை நிறு ... சார்பிலும் அவ ...ழைப்பை விடுத்த ... முதலில் சரோஜா ...றுத்துவிட்டார். இத் தகவலை எம். ஜி.ஆரிடம் தெரிவித்தேன். அவருக்குச் சிரிப்போடு கூடிய ஒரு கோபம் வந்தது. அதை வெளிக்காட்டாமல், அப்படியானால் நான் ஜெயலலிதாவைக் கூட்டிக் கொண்டுபோவதாக சரோஜாதேவியிடம் கூறிவிடுங்கள். என்றார். இந்தப் பேச்சுவார்த்தைகள், தூது எல்லாம் சத்தியா ஸ்ருடியோவில் நடைபெற்றுக்கொண்டிருந்தன.

எம். ஜி. ஆர். மேக்கப் போடு இருக்கிறார். சரோஜா தேவி மேக்கப்போட்டுக் கொண்டிருக்கிறார். "சரி" என்று சரோஜாதேவியின் மேக்கப் அறைக்குள் சென்றேன். நீங்கள் வராவிட்டால் ஜெயலலிதாவை அழைத்துக் கொண்டு இலங்கைக்கு வருவதாக எம். ஜி. ஆர். சொல்லுகிறார் என்றேன்.


"அப்படியா? நான் வருகிறேன்" என்றார் சரோஜாதேவி. "எதுக்கும் நாளை நாங்கள் எல்லோரும் பம்பாய் போகிறோம். நீங்கள் விமான நிலையத்திற்கு வாருங்கள், முடிவு சொல்கிறேன்" என்றார். இத் தகவலை எம். ஜி. ஆரிடம் தெரிவித்துவிட்டு நாளைக்கு உங்களை சென்னை விமான நிலையத்தில் சந்திக்கிறேன் என்று கூறிவிட்டுப் புறப்பட்டேன். எனக்கு என்னவோ சரோஜாதேவியில்தான் எம். ஜி. ஆரின் வருகை தங்கியிருக்கிறது என்பது நிச்சயமாயிற்று. இருந்தும் என்னால் இதைத் தீர்த்துவைக்கமுடியவில்லை.

## கடிதத்தில் கையெழுத்து

இவர்களுக்கிடையே பலதும் பத்தும் இருக்கும். நான் இதில் தலையிடுவது சரியல்ல. இன்று இரவுக்குள் எப்படியும் தீர்வு காணலாம் என்ற முடிவோடு என்னுடைய மற்றும் வேலைகளைக் கவனிக்கச் சென்றுவிட்டேன். விடிந்ததும் விடியாததுமாக அடுத்த நாள் காலை விமானநிலையத்தில் நின்றேன். முதலில் எம். ஜி. ஆர். வந்தார். சில நிமிடங்களில் சரோஜாதேவி, தாயாரோடும் தந்தையாரோடும் வந்தார். எம். ஜி. ஆர். என்னைக் கண்டதும் சரோஜாதேவியிடம் வருவதாகக்கூறி ஒரு கடிதம் வாங்கிக்கொள்ளுங்கள் என்றார். சரோஜாதேவி வந்ததும் அவரோடு சில நிமிடங்கள் பேசிவிட்டு "என்ன இலங்கை வருகிறீர்கள்தானே" என்றேன். "வருகிறேன்" என்றார்.

"அப்படியானால் நீங்கள் வரச் சம்மதிப்பதாக ஒரு கடிதம் எழுதித்தாருங்கள்" என்றேன். "நீங்கள் எழுதுங்கள் நான் கையெழுத்துப் போடுகிறேன்" என்றார். நான் எழுதிக்கொடுத்ததில் கையெழுத்துப் போட்டுத்தந்தார். இதை எம். ஜி. ஆரிடம் காட்டினேன். அவருக்குப் பரம திருப்தி. அவரிடமும் சம்மதம் தெரிவித்து ஒரு கடிதம் தரும்படி கேட்டேன். பம்பாயிலிருந்து வந்ததும் தனது 'லெட்டர் ஹெட்டில்' கடிதம் எழுதித்தருவதாகக்கூறினார். இவர்கள் இருவரும் பம்பாய் விமானத்தில் ஏறும்வரை காத்திருந்து விமானத்தில் ஏறியதும் 'அப்பாடா' என்று பெருமூச்சு விட்டுக்கொண்டு 'ஏதாவது அருந்துவோம்' என்று கன்டீன் பக்கம் சென்றேன். அங்கே 'காப்பி' என்றேன். 'நேரமாகும்' என்றார்கள். 'கூல் டிறிங்' என்றேன். கொண்டு வந்துவைத்தார். பில்லையும் வைத்தார். பில்லைப் பார்த்ததும் தலைசுற்றியது. என்னிடம் அந்தப் பில்லில் இருந்த தொகை இருக்கவில்லை. என் நண்பனிடமும் இருக்கவில்லை. என்னசெய்வது?

(அடுத்த வாரம்)



டைரக்டர் ஸ்ரீதருடன் திரு. மயில்வாகனன்

## தமிழ் வளர்த்த கிறிஸ்தவர்—5

# அச்சுப் புத்தகம் கிடைக்க பெரும் முயற்சி எடுத்தவர்!

வீரமாமுனிவரைத் தொடர்ந்து தமிழ்நாடு வந்தவர், ஸீகன்பால்க் (Ziegenbalg) என்னும் குருவாவார். இவர் ஜெர்மன் தேசத்தவர். தமிழ் நாட்டிலே தரங்கம்பாடியில் வாழ்ந்தவர். எட்டு மாத காலத்துள் தமிழ் மொழியைத் திறமையாகக் கற்று அம்மொழியில் எழுதவும் பேசவும் ஆரம்பித்தார். தமிழ்-லத்தீன் இலக்கணத்தையும் அகராதியையும் ஆக்கியவர் இவரே. அதுவரை ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்டிருந்த தமிழ் நூல்களை அச்சிட வேண்டுமென இவர்ஆவல்கொண்டார். ஜெர்மனி தேசத்திலிருந்து சிறு அச்சியந்திரம் வரவழைத்து தமிழ் நூல்கள் பலவற்றையும் இவர் அச்சிட்டுப் பரப்பினார். அச்சிலே வந்த நூல்களை மக்கள் ஆவலோடு வாங்கிப் படித்தனர். தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு அச்சேறிய நூல்கள் இன்றியமையாதவையாயிருந்தன. பண்டிதர்முதல் பாமரர்வரை யாவருக்கும் அச்சுப் புத்தகம் கிடைக்கத்தக்கதாகப் பெரு முயற்சிசெதய்வர் இவரேயாவர். இந்திய மொழிகளுள் முதன் முதலாக அச்சேறிய மொழி தமிழ்மொழியேயாம்! இப்பெருந்தொண்டைத் தமிழுக்கு ஆற்றியவர் கிறிஸ்தவ குருமாரேயாம்!

மொழியின் வளர்ச்சியில் அச்சியந்திரம் ஒரு பெரும்புரட்சியை ஏற்படுத்தியதென்பது உண்மையே. அவ்வித புரட்சியால் வளர்ச்சியடையத் தொடங்கிய முதல் இந்திய மொழி தமிழேயாம்! இவ்வித புரட்சியால் தமிழ் மொழி வளர்ச்சியை முதலிலே உண்டாக்கியவர் ஸிகன்பால்க் என்ற கிறிஸ்தவ தொண்டரே.

அடுத்து வந்தவர் எல்லிஸ் (Ellis) என்னும் ஆங்கிலேயராவர். இவர் சென்னை அரசாங்க உத்தியோகத்தில்அமர்ந்திருந்தவர். சமஸ்கிருதம், தமிழ் ஆகிய இரு மொழிகளையும் நன்கு கற்றுத்தேறியவர். அக்காலத்துச் சிறந்த தமிழ்ப் புலவராகிய முத்துச்சாமிப்பிள்ளை என்பவரைச் சேர்ந்து, அவர்மூலம் ஆங்காங்கு பரவிக் கிடந்த ஏட்டுச் சுவடிகள் எல்லாவற்றையும் எடுத்துச் சேர்த்தவர் எல்லிஸ் அவர்களே!

விசேஷமாக வீரமாமுனிவரால் ஆக்கப்பட்ட அரிய நூல்களைத் தேடியெடுத்து, அவற்றைப்பேணிவைத்தவர்இவரே. இவரின் பெரு முயற்சியில்லாதிருந்தால் வீரமாமுனிவர் சரிதமும் அவர் ஆக்கிய நூல்களும் இன்று உலகுக்குத் தெரிந்திரா. ஆங்கிலப்புலமையும் தமிழ்ப் புலமையும் பெற்ற இவர் திருக்குறளின் முதல் பதின்மூன்று அதிகாரங்களுக்கும் ஆங்கிலத்தில் உரை எழுதி அச்சிட்டார். செய்யுள் இயற்றுவதில் அதிக விருப்பமும் திறமையும் உள்ளவர். இவர் நண்பனான இராமச்சந்திர கவிராயர் பேரில் இவர் பாடிய பின்வரும் பாடல் இவரது கவித்திறனைக்காட்டுவதாயிருக்கிறது.

"செந்தமிழ்ச் செல்வனு
மோராயிரந்
தலைச் சேடனும் யாழ்
சுந்தரத் கோடிசை வல்லோனும்
யாவரும் தோத்திரம் செய்
கந்தனைக் கொல்லும்
கவிராமச்
சந்திரனைக் கண்டு வெட்கி
அந்தரவெற் பிழி பாதாளந்
தேடி
அடங்கினரே!"

தமிழ்மொழி கற்க விரும்பிய பிறநாட்டவருக்குப் பயிற்சியளிக்கும் கல்விச் சங்கம் ஒன்றைக் கட்டி நிறுவியவர் எல்லிஸ் அவர்களே. நமசிவாய என்னும் ஐந்தெழுத்து சைவரால் போற்றப்படும் தாரக மந்திரமாம். ஆனால் எல்லிஸ் அவர்கள் அதற்கு வேறு வியாக்கியானம் கொடுத்து "சிவாய" என்பது நன்மை பயக்குவன் என்ற கருத்தில் நமசிவாய கவிகள் பல ஆக்கினார். தமிழ் வளர்த்த மதுரையில் வாழவிரும்பி அங்கு சென்று இலக்கியத் தொடர்புடைய இடங்களைக் கண்டு இன்புற்றார். தாயுமானவர் அடக்கம் பண்ணப்பட்டஇடத்தைக்கண்டு தலைகுனிந்து வணங்கித் தமிழ்க் கவிகள் பாடினார்.

எல்லீஸர் தமிழ் வளர்ப்பதைக் கண்டு எரிச்சல்கொண்டனர், வேறு சில "தமிழர்." இறுதியில் அவருடைய உணவிலே நஞ்சு வைத்துஅவரைக் கொன்றனர். அவரது ஆராய்ச்சிக் களஞ்சியம் அனைத்தையும் ஆங்கில அரசாங்கம் ஆராய்ந்தெடுத்துவைத்தது.

(தொடரும்)

வண. எம். ஏ. இரத்தினராஜா

# சுயதரிசனம் !



## குரும்பசிட்டி மு. திருநாவுக்கரசு

மனம் பொரும... கண்கள் கலங்க... பித்துப்பிடித்தவள் மாதிரி, கமலா அந்த மண் திண்ணையில் வெகுநேரமாக உட்கார்ந்திருக்கிறாள். தாய் பாக்கியம் அடுக்களைக்குள்ளிருந்து சாற்றுத் தட்டுடன் வருகிறாள்.

''எனக்கு வேண்டாமணை... நீ சாப்பிடணை...'' கமலா பிடிவாதமாக மறுக்கிறாள்.

''உந்தக் கோழி ஒண்டு துலைஞ்சதுக்காக உப்பிடி ஏன்ரி ஏக்கம் பிடிச்சமாதிரி இருக்கிறாய்... ஒண்டு போனா மிச்சம் ஒன்பது நிக்குதடி... சாப்பிடடி பிள்ளை...''

''எணை... எனக்கந்தக் கோழியைக் கண்டுபிடியாமை இண்டைக்குச் சாப்பாடே இறங்காதணை... பத்து முட்டைக்கு அடைவைச்சு...அதிலை எட்டுப் பொரிச்சு... ஏழையும் பிராந்துக்கு இரையாக்கிப் போட்டு இந்த ஒண்டை என்ன மாதிரி ஆசை அருமையா நான் பாத்தெடுத்தனான்... அடுத்த மாதம் முட்டையிடத் தொடங்கியிடும். அந்தக் கன்னிக் கோழியை அதுக்கிடையிலை ஆ...'' மிகுதியைக் கண்ணீர் பேசுகிறது.

''அழாதையடி பிள்ளை... ஆ... குறுக்காலை போவாங்கள்... ஆர் சட்டியுக்கை வைச்சாங்களோ...'' பாக்கியம் திட்டத் தொடங்கிவிட்டாள்.

திட்டு என்பது அவளுக்குத் தண்ணிபட்டபாடு.

''நீ சாப்பிடடி பிள்ளை... நான் இன்னொருக்காப் பனைவடலிப் பக்கமாய்ப் பாத்து வாறன்...'' பாக்கியம் சொல்லிக்கொண்டே வீட்டின் கிழக்குப்புறமாக உள்ள பனங்கூடலை நோக்கிப் போகிறாள்.

கமலா சோற்றுத் தட்டை வெறுப்புடன் பார்க்கிறாள். அவள் கைவிரல்கள் சோற்றை அழைந்து உருண்டையாக்கி... ஒரு பிடி ஒருமாதிரி உள்ளே நுழைகிறது. அடுத்த பிடியை ஏற்க அவள் பசித்த வயிறு தயாராக இருந்தபோதிலும்அவளுடைய மனம் தயாராக இல்லை.

சோற்றுத்தட்டை அடுக்களைக்குள் மூடிவைத்துவிட்டுக் கையை அலம்பிக்கொண்டு மறுபடியும் திண்ணைப்பக்கமாக வந்து தையல்மெஷின் இருக்கும் மேசையில் உட்கார்கிறாள். நேற்று மத்தியானம் தைத்துக் கொடுக்கவேண்டிய சட்டை ஒன்று பாதி வெட்டியும் வெட்டுப்படாமலும் மெஷின் மீது கிடக்கிறது.

சட்டைக்குச் சொந்தக்காரியான உமா சட்டைககாகக் கமலாவிடம் இதுவரை காலையிலிருந்து நாலு நடை நடந்துவிட்டாள். மன அலுப்புடன் கமலா மிகுதியையும் எடுத்து வெட்டி மடிக்கிறாள்.

படலைத்தட்டி சரசரக்க அவள் பார்வை அங்கே பதிகிறது.

''அக்கா தைச்சுப்போட்டியளே?'' மூக்கு ஒழுக... எண்ணை படியாத பிசான் பிடித்த தலையுடன் அழுக்குச் சட்டையுடன் தனக்கு முன்னுல் வந்து நிற்கும் உமாவை அருவருப்புடன் பார்க்கிறாள் கமலா.

''என்னக்கா... எப்ப தைக்கத் தந்தது... இப்பதானே யக்கா வெட்டிறியள்...'' அவள் சிணுங்குகிறாள்.

''உப்பிடிக் கரைச்சல் குடுக்கிறதெண்டா வேறை எங்கையேன் கொண்டுபோய்த் தைப்பி...''

''நாங்க ஆரட்டையக்கா போறது? உங்களை விட்டா எங்களுக்கு ஆரக்கா தைச்சுத்தர இருக்கினம்? பின்னேரத்துக்கிடையிலை தருவியளே அக்கா?''

''ஓம் தாறன்... போட்டுப் பின்னேரமாவா...'' வேண்டா வெறுப்பாகப் பதில் வருகிறது.

''இண்டைக்குப் பின்னேரம் கோயிலுக்குப் போட வேணுமக்கா...''

''புதிசு தைச்சுத்தான் கோயிலுக்குப் போடப்போறியோ?''

''ஓமக்கா... கிடக்கிறதெல்லாம் கிழிசல்...''

''சரி...சரி...என்னைக் கரைச்சல்படுத்தாதை... பின்னேரம் வா...''

''கரைச்சல் படுத்தாமை இதிலை நிக்கிறேனக்கா...''

உமா போகவில்லை. அவள் அமைதியாகத் திண்ணையில் உட்கார்ந்துகொள்கிறாள்.

கமலாபுறு புறுத்துக்கொண்டு துணியை ஒருமாதிரியாக வெட்டி முடித்துவிட்டாள். மெஷின் ஊசியில் நூலைக் கோர்க்கிறாள்.

படலைத்தட்டி மீண்டும் சரசரக்கிறது.

காதில் வைரக்கம்மல்கள் டாலடிக்க... கைநிறையக் காப்புகள் சலசலக்க, கழுத்திலே தங்கச்சங்கிலி புரண்டு நெளிய ஓவசியரின் மகள் லதா ஒரு துணியுடன்ஓடிவருகிறாள்.

''அன்ரி... அன்ரி..., மாமி இந்தச் சட்டையை இப்ப தைச்சு வரட்டாம். பின்னேரம் நான் கோயிலுக்குப் போடவேணும்... தைச்சுத் தாங்கோ அன்ரி...''

லதா கமலாவை நச்சரிக்கிறாள். கமலாவிடம் லதாவின் துணி மாறுகிறது. உமாவின் ஏக்கமான ஒரு பார்வையை இருவரும் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. துணியின் பளபளப்பிலும் பெருமையிலும் கமலாவின் மனம் மயங்குகிறது.

''இது சிங்கப்பூர் அன்ரி அனுப்பின துணி...'' லதா பெருமைப்பட்டுக் கொள்கிறாள்

''லதாக்குஞ்சு... நீங்க வேறை போட்டுக்கொண்டு போங்கோ... பிள்ளைக்குக் கட்டாயம் நாளைக்குத் தைச்சுத் தாறன்...''

''நான் இதுதான் போடுவேன்... இல்லாட்டிக் கோயிலுக்குப் போகேன்... அன்ரி தையுங்கோ... டடி ஒவ்வீசாலை வந்திடுவர்... சுறுக்காத் தையுங்கோ அன்ரி...'' லதா மீண்டும்மீண்டும் நச்சரிக்கிறாள்

உமாவின் ஆறு ரூபா பெறுமதியான கூப்பன் சீத்தை அநாதையாக்கப் படுகிறது. உமாவின் உள்ளம் பொருமுகிறது. உதடுகள் ஏதேதோ சொல்லத் துடிக்கின்றன. அவளால் பேசமுடியவில்லை. பயமும் பணிவும் அவளை ஊமையாக்குகிறது. லதாவைப் போல அவளால் பிடிவாதம் பிடிக்கமுடியாது. பிடிவாதம் என்ற சொல் அவளுடைய வர்க்கத்தின் அகராதியில் இல்லை. வாய்திறந்து நியாயத்தைக் கேட்டால் இன்றோ நாளையோ கிடைக்கவேண்டிய உரிமையும் கிடைக்காமல் போய்விடும்.

உள் மனத்தளத்தில் அவள் அழுகை வெடிக்கிறது. அந்த மனதோடு தன் அழுகையை அவள் வைத்துக்கொள்கிறாள். துரிதவேகத்தில் கமலாவின் கைகள் இயங்குகின்றன. வெகுலாவகமாக அந்தச் சிங்கப்பூர் துணியை வெட்டி மடிக்கிறாள்.

''அச்சா அன்ரி...'' லதாவின் பாராட்டுரை அவளை இன்னும் வேகமாக இயங்கவைக்கிறது.

'வாறமாசம் சிங்கப்பூர் அன்ரி துணிகொண்டு வரேக்கை உங்களுக்கும் நான் தருவன்தானே...'' லதா சொன்னதும்தான்... அவளை அணைத்து கன்னத்தில் ஒரு முத்தம்கொடுக்கிறாள் கமலா.

மெசின் சத்தத்தை நிறுத்த மீண்டும் படலை தட்டி சரசரக்கிறது.

''குறுக்காலை போவான்... ஏழை எளியதுகளின்ரையெண்டாப்போலை இப்பிடியும் செய்யிறதே ... இஞ்சை பாரடி கமலா... கோழியின்ரை ஒரு கால் முறுஞ்சுபோச்சடி'' ரத்தம் சொட்டச்சொட்டக் கமலாவின் அந்த அழகான கன்னிக்கோழியை பாக்கியம் கொண்டுவருகிறாள்.

கமலா ஓடிப்போய் கோழியை வாங்கிப் பார்க்கிறாள். சப்தம் போடப் பெலனை இழந்த கோழி மெதுவாகக் கேருகிறது. வாஞ்சையுடன் கமலா அந்தக் கோழியின் முறிந்த காலைத் தடவும்போது அவளுக்கு துக்கம்பீரிட்டுகிளம்புகிறது.

'ஆரணை இந்த எளியவேலையைச் செய்தவன்?' ஆத்திரத்துடன் அவள் தாயைக் கேட்கிறாள். 'வேறை ஆர்...அங்காலை கான் என்ரை கோழிக்கு அவர் இந்த எறி எறிஞ்சிருக்கிறார். அவற்றை ஆடு வந்து எங்கடை வாழையைக் கடிச்சதற்கு நாங்க அந்த ஆட்டைப் பிடிச்சுக் கட்டிவைச்சிட்டோம் என்று எத்தினை துள்ளுத் துள்ளினவர்...தனக் கொரு நியாயம் எங்களுக்கொரு நியாயம்...இவைதான் ஊருக்குப் பெரிய மனிதர்...'கமலா ஆத்திரத்தில் திட்டத் தொடங்கிவிட்டாள்.

'எடியே...எறியையுக்கை பார்த்துக்கொண்டு நிண்ட உவள் உமாவின்ரை தமையன் வீட்டான் பெஞ்சனியர் தான்...அவன் நாசமாப் போக...' பாக்கியம் ஒரு பிடி மண்ணை அள்ளி பெஞ்சனியர் வீட்டுப்பக்கமாக எறிந்து சபிக்கிறாள். என்ன செய்வது இப்போதைக்கு சபிப்பதும் திட்டுவதும்தான் கீழே நசுக்கப்படுபவர்களின் அகிம்சா ஆயுதம்!

கமலா ஒரு துணியைக் கிழித்து நல்லெண்ணையில் தோய்த்து கோழியின் எறிபட்ட காலில் கட்டிவிட்டு கூட்டுக்குள்ளேகொண்டுபோய் விடுகிறாள். 'அவற்றை பூங்கண்டைக் கிளறுதெண்டு தான்ரி எனக்குச் சொன்னவன். எறிவேண்டிக்கொண்டு பனைவடலிப் பக்கமா ஓடிப்போய் எழும்பேலாமை விழுந்து கிடந்த கோழியையும் அவன்தான்ரி எடுத்துத் தந்தவன். ஓவசியர் வீட்டுக் கோழி போக அதை சூ...சூ... காட்டித் திரத்திப் போட்டு எங்கடை இந்தக் கோழியைத்தானும் வேணுமெண்டு பெஞ்சனியர் கல்லாலை எறிஞ்சவர்...ஓவசியர் விட்டுக்கோழி பணக்காற வீட்டுக் கோழியல்லே...' பாக்கியம் பெருமூச்சுடன் கொல்லைப்புறமாக போகிறாள்.

கமலா எதுவும் பேசவில்லை.

மௌனமாக அவள் மெசினடிக்கு வருகிறாள்.

'அன்ரி...எனிச் சுறுக்காத் தையுங்கோ அன்ரி...' லதா நச்சரிக்கிறாள். சிங்கப்பூர் துணி மெசினிலிருந்து எடுக்கப்படுகிறது.'

'அன்ரி...ஏன் கழட்டிறியள்...தையுங்கோ அன்ரி...' லதா சிணுங்குகிறாள். லதாவின் சிணுங்கல் கமலாவை ஒன்றும் செய்யவில்லை.

ஒதுக்கிவைக்கப்பட்ட உமாவின் ஆறு ரூபா கூப்பன் சீத்தையை அவசரம் அவசரமாக மெசினுக்குள் கமலா செருகுகிறாள்.

'அன்ரி... அன்ரி...என்ரை சட்டையைத் தையுங்கோ..., லதா அழத்தொடங்கிவிட்டாள்.

'இங்கை பார் லதா...பெஞ்சனியரும் உன்ரை அப்பர் ஓவசியரும் ஒரு ஆக்கள். நானும் உமாவும் என்னொரு ஆக்கள். பெஞ்சனியர் அதை எனக்குக் காட்டித் தந்திட்டார். நான் ஆர் எண்டது இப்பதான் எனக்குத் தெரியுது... நான் எங்கை நிற்க வேணுமெண்டதும் இப்பதான் எனக்கு விளங்குது'' கமலாவின் பேச்சு லதாவுக்கு விளங்கவில்லை.

அவளுக்கு அது விளங்காது. விளங்கக்கூடிய பருவமல்ல அவள் பருவம். பருவம் கடந்தவர்களுக்கே கமலா சொன்ன உண்மை விளங்காதபோது லதாவுக்கு...?'

லதா அழுதுகொண்டு போகிறாள்.

கமலா உமாவை நிமிர்ந்து பார்க்கிறாள்.

நியாயம் கிடைத்த நிம்மதியில் அந்த ஏழைக் குழந்தையின் சின்னஞ்சிறுமுகம் மகிழ்ச்சியில் பொங்கிப் பூரிக்கிறது.

(யாவும் கற்பனை)




விவசாயிகளே!

# மிளகாய்ச் செடிகளை பாதுகாருங்கள்

## மு. நடராசா

(இளைப்பாறிய மாவட்ட விவசாய விஸ்தரிப்பு ஊழியர்)

தற்பொழுது நிலவும் கடும் பனி காரணமாகவும் மேடையில் மருந்துகள் அடியாத காரணத்திலும் குளிப்பொன், அராலிப்பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள சிறு கன்றுகள் சுருள் நோயாலும், இலைப் புள்ளி நோயாலும் கடுமையாய்ப் பாதிக்கப்பட்டிருக்கிறதென்பதை கமக்காரர் மூலமாய் அறியமுடிகிறது.

பின்வரும் மருந்துகளைப் பாவித்ததன்பயனை வவுனியா கமப்பள்ளிக்கூடத்தில் பயிலும் மாணவர்கள் செய்கைபண்ணிய மிளகாய்த்துண்டில் இந் நோயைக் கட்டுப்படுத்தினர்கள் என்று ந. தவராசா (விவசாயப் போதனாசிரியர், கமப் பள்ளிக்கூடம், வவுனியா) உறுதியாகக் கூறுகிறார்.

''மொறஸ்ருன்''- ஈரத்தூள்– இது ஒரு கிருமி காளான் நாசினி கலந்ததூள். இது சுருள்நோயை ஏற்படுத்தும் ஒட்டுண்ணி, பனிப்பூச்சி, ஊமுக்கணவன், வெள்ளை ஈயையும் இலைப்புள்ளியை ஏற்படுத்தும் காளானையும் கட்டுப்படுத்தும். இந்தக் காளான் கிருமி நாசினியுடன் ''சேர்பக்ருன்ற்'' ஒட்டிப்பிடித்திருக்கும் தன்மையைக் கொடுக்கும் பவுடரையும் சேர்த்து கரைசலைக்கலந்து தெளிக்கவும்.



### பாவிக்கும்முறை

மேற்கூறப்பட்ட ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு அவுன்ஸ்ச் பவுடரை எடுத்து தேங்காய் சிரட்டைக்குள் வெவ்வேறுகப் பசையாக்கி பின்பு வெவ்வேருக நீர் கலந்து பெருக்கி பின் ஒரு பாத்திரத்தில் இரண்டு கலவையையும் ஊற்றி நல்லாய்க் கலந்த பின் நப்சக் (Knapsack) ஸ்பிறேயரில் ஊற்றிக் கன்றுகளுக்கு 10 நாளைக்கு ஒருமுறை தெளிக்கவும்.

### பிரமாணம்

1 அவுன்ஸ் மொறஸ்ருன், 1 அவுன்ஸ் சேர்பக்ருன்ற் ஆகியவற்றை 6 கலன் நீரில் கரைக்கவும். ஓர் ஏக்கருக்கு 20—40கலன் கரைசல்தேவைப்படும். இது கன்றுகளின் வளர்ச்சியைப் பொறுத்தது. இம் மருந்துகள் விவசாய கமக் கொல்லி, மற்றும் பசளை விற்பனைசெய்யும் எல்லா ஸ்தாபனங்களிலும் கிடைக்கும்.

### விலை விபரம்

மொறஸ்ருன் – 1/4 இரு. ரூ. 13-50

'' 1/2 இரு. -ரூ. 25-50

சேர்பக்ருன்ற் – 1 இரு. ரூ. 4-50.

இந்நோய் ஏனைய பகுதிகளுக்கும் பரவக்கூடிய அபாயம் இருப்பதால் மிளகாய்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் உடனடியாக இம்மருந்துக் கலவைகளைப் பாவித்து பயிர்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

# நீதிமன்றங்களில் ஜி. ஜி. யின் சாகசங்கள்!

கா. யோகநாதன்

பிரதமர் பண்டாரநாயக்கா கொலை வழக்கில், எதிரிகள் சார்பில் வாதாடும் பட்சத்தில் சட்டமேதை ஜி. ஜி. பொன்னம்பலத்திற்கு 3 லட்சம் ரூபா கொடுக்க முன்வந்தார்கள். ஆனல் ஜி. ஜி., தமது நண்பர் பண்டாரநாயக்கா கொலை வழக்கில் எதிரிகள் சார்பில் ஆஜராக மறுத்துவிட்டார்.

இதனை அக்கொலை வழக்கில் 1ம் எதிரியாகவிருந்த புத்தரகித்த தேரோவே ஒருசமயத்தில் 'இந்த நாட்டின் பிரபல வழக்கறிஞர் ஒருவருக்கு 3 லட்சம் ரூபா கொடுத்து ஏற்படுத்த முயற்சித்தும், அது முடியாமற் போய்விட்டது' எனக் கூறியிருந்தார்.

3 லட்சம் ரூபாவை ஏற்க மறுத்த சட்டமேதை ஜி. ஜி. அண்மையில் நடந்த இரு பிரபல வழக்குகளில் இலவசமாகவே ஆஜரானர்.

தமிழ்த் தலைவர்கள் மீதான 'ட்ரயல் அட்பார்' வழக்கில் தள்ளாத வயதிலும், சுகவீனமுற்றிருந்த நிலையிலும் பூரண ஓய்வு எடுக்கவேண்டுமென்ற டாக்டர்களின் ஆலோசனையையும் மீறி, தமிழினத்திற்காக இலவசமாக ஆஜராகி வாதாடினர்.

தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி மீதான கோதுமை ஊழல் வழக்கிலும், ஜி. ஜி. 'ஒரு காசும் வாங்க மாட்டேன்' எனக் கூறி இலவசமாகவே ஆஜரானர்.

தமது ஆதரவாளர் சம்பந்தப்பட்ட சில வழக்குகளிலும் அவர் இலவசமாகவே ஆஜராகியிருக்கிறார்.

## இரண்டு யானைப்பெட்டி

அப்போது இரண்டாவது உலக யுத்தம் முடிந்த பின்னர் சில பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதால் கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டிருந்தது. நல்ல யானைப் பெட்டிதான் அப்போது கிராக்கியாக இருந்தது. ஒரு தீப்பெட்டியின் விலை 5 சதம். யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள வர்த்தகர் ஒருவர் தட்டுப்பாட்டைச் சாதமாக்கி ஒரு தீப்பெட்டியை 10 சதமாக விற்றுவந்தார். கட்டுப்பாட்டதிகாரிகள் அவரை 'டிக்கோ' வைத்துக் கையும் மெய்யுமாகப் பிடித்துவிட்டனர். அச்சமயத்தில் கொள்ளை லாபமடிப்பது பெருங் குற்றம்.

நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது. வர்த்தகர் சார்பில் ஜி. ஜி. தோன்றி வாதிட்டார்.

விலைக்கட்டுப்பாட்டுஅதிகாரி சாட்சியமளித்தபின் குறுக்கு விசாரணை ஆரம்பமானது. ஜி. ஜி. அங்கு தடயப்பொருளாக இருந்த தீப்பெட்டியைக் கையிலெடுத்தார். அப்பெட்டியின் முகப்பில் இரண்டு யானைகளின் படம் காட்சியளித்தது. யானைப் பெட்டிக்குத்தான் அப்போது கிராக்கியிருந்தது.

தீப்பெட்டியின் கட்டுப்பாட்டு விலை என்ன? என்ற கேள்வியை ஜி. ஜி. கேட்டதும் சாட்சி 5 சதமெனப் பதிலளித்தார்.

ஜி. ஜி. கையிலிருந்த தீப்பெட்டியைச் சாட்சியிடம் காட்டி, 'இதே பெட்டியைத்தான் வாங்கினீர்? என்றதும் ஆமென்றார். அடுத்துத் தீப்பெட்டியிலுள்ள இரண்டு யானைப் படங்களைக் காட்டி, 'இரண்டு யானைப் பெட்டியை 10 சதம் கொடுத்து வாங்கினீர்?' என்றதும் அவர் 'ஆம்' என்றார். 'ஒரு பெட்டியின் விலை 5 சதமென்றால் இரண்டு பெட்டியின் விலை என்ன?" என்றதும் 10 சதம் என்றார். அத்துடன் வழக்குப் பறந்தது.

## உரும்பராய் வழக்கு

வடபகுதி அசைஸ் கோர்ட்டில், உரும்பராய்க் கொலை வழக்கு நடந்துகொண்டிருந்தது. முதல் நாள் விசாரணை முடிந்தது. எதிரி சார்பில் ஜி. ஜி. ஆஜரானார். மறுநாள், எதிரியின உறவினர் ஒருவர் ஜூரிசபை உறுப்பினர் வீட்டில் நின்றாரென நீதியரசரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. வழக்குப் பறக்கப் போவதையறிந்து இப்படிக் குறுக்கு வழியொன்றைக் கையாண்டனர். ஜி. ஜி. விடவில்லை. அத்தகவல் தந்தவரை கூண்டில் ஏற்றிக் குறுக்கு விசாரணைசெய்தார். குறுக்கு விசாரணையில் உண்மைகள் வெளியாகின. அத்தகவல் பிழையென நிரூபிக்கப்பட்டு, தகவல் தந்தவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. வழக்கு வேறு தவணைக்குப் பிலபோடப்பட்டது.

## எதிரிக்காகவும் ஆஜரானர்

எதிரியாக இருந்தாலும் ஜி. ஜி., அவரைக் காப்பாற்றப் பின் நிற்பதில்லை. சரசாலை இரட்டைக் கொலை வழக்கில் எதிரியாக இருந்தவர் அரசியலில் ஜி. ஜி.க்கு நேர் மாறானவர். அப்படியிருந்தும் அவருக்காக வாதாடி, கீழ்க் கோர்ட்டிலேயே வழக்கை முறியடித்து, எதிரிக்கு விடுதலைபெற்றுக்கொடுத்தார். இவ்வழக்கின் தொகுப்புரையின் போது ஜி. ஜி. நீதிபதி, 'எதிரி அரசியலில் நிற்கும் பக்கம் தான் பிழையேயொழிய அவர் மிகவும் நல்ல மனிதர்' என நகைச்சுவையுடன் கூறினர்.

மற்றொரு கொலை வழக்கில் அரசதரப்பில் ஆஜரான வழக்கறிஞரின் ஒரு கால் கொஞ்சம் கட்டை. ஊன்றியபடிதான் நடப்பார். அவ்வழக்கில் அவர் தொகுப்புரையை முடித்ததும், எதிரி சார்பில் ஆஜரான ஜி.ஜி. தொகுப்புரையை ஆரம்பிக்கும்போது 'வழக்காளி தரப்பு ஒரு காலில் தொங்கிக்கொண்டிருக்கிறது' என நகைச்சுவையாகக்கூறியபோது ஜூரிசபையினர் மட்டுமன்றி நீதிபதியும் அதன் இரட்டைக் கருத்தையறிந்து மெதுவாகச் சிரித்துக்கொண்டார்.

மயிலிட்டி விஜயன் வழக்கு மூன்று மாதமாக நடந்தது. அவ்வழக்கில் ஜி. ஜி.யின் திறமை மிக்க வாதங்கள் அக்காலத்தில் எங்குமே பேச்சாக இருந்தது.

## சாட்சி கும்பிட்டார்

• யாழ்ப்பாண மாஜிஸ்திரேட் கோர்ட்டில் நடந்த இரணைதீவுக் கொலைவழக்கில் ஜி. ஜி. குறுக்குவிசாரணை செய்துகொண்டிருந்தார். அவ்வழக்கின் சாட்சி இரணைதீவைச் சேர்ந்தவர்.

சாட்சிக் கூண்டில் ஏறியதும் சாட்சியமளிக்கத் தொடங்கியது முதல் முடியும்வரை எதிரிலிருந்த ஜி. ஜி.யைப் பார்த்துக்கொண்டே சாட்சியமளித்தார். குறுக்குவிசாரணை ஆரம்பமானதும் ஜி. ஜி. எழுந்து அவர் அருகில் போகத்தொடங்கியதும், சாட்சி தன்னையும் அறியாமலே இரு கைகளையும் கூப்பி ஜி. ஜி.யை வணங்கிவிட்டார். நீதிமன்றம் எங்குமே ஒரே சிரிப்பொலியாக இருந்தது. ஜி. ஜி.யால்கூடச் சில நிமிடங்கள் சிரிப்பை அடக்க முடியவில்லை.

வடபகுதி அசைஸ் நீதிமன்றத்திற்கு வேறொரு வழக்கு விஷயமாக ஜி. ஜி. வந்திருந்தார். முக்கிய அலுவலாக அன்று கொழும்பு செல்லவிருந்தார். பலாலிக்குப் போகும் வழியில் நீதியரசரைச் சந்திப்பதற்காக வந்திருந்தார்.

அன்று நீதிமன்றத்தில் கொலைவழக்கொன்று நடந்துகொண்டிருந்தது. வயோதிபத் தந்தையும் மகனும்தான் எதிரிகள். அரசு தரப்பில்தான் எதிரிகளுக்கு ஒரு வழக்கறிஞர் நியமிக்கப்பட்டிருந்தார். எதிரிகள் மிக ஏழைகள். ஜி. ஜி. உள்ளே சென்றபோது, கூண்டில் நின்ற அந்த வயோதிப எதிரியைக் கண்டுகொண்டார். அந்த வயோதிபா ஜி. ஜி.யின ஆதரவாளர். மிகமிக வேண்டியவர். ஜி. ஜி. அருகில் சென்றதும் அவ்வயோதிபரின் கண் கலங்கியது. ஜி. ஜி.க்குப் பொறுக்கமுடியவில்லை. ஒரு மணி நேரத்திற்குள் விமான நிலையம் செல்லவேண்டும். வயோதிபரையும் காப்பாற்ற வேண்டும். அவ்வழக்கு விபரங்களை ஜி. ஜி. கேட்டறிந்தார். தந்தை, மகனையும் காப்பாற்ற வேண்டுமென்று ஜி. ஜி.யிடம் கூறினர். மகனைக் குறைந்த குற்றத்தை ஒப்புக்கொள்ளுமாறு கூறினர்.

நீதியரசர் ஸ்ரீஸ்கந்தராசா வந்ததும் ஜி. ஜி. எழுந்து 'மகன குறைந்த குற்றததை ஒப்புக்கொள்வதாகக் கூறினர். உடனே தந்தை விடுதலைசெய்யப்பட்டார். அடுத்து ஜி.ஜி. எழுந்து சுமார் 10 நிமிடங்கள் சட்டவாதம் புரிந்து மகனை பிணையில் விடுதலை செய்யுமாறு கோரினர். நீதியரசர் அதனை ஏற்று மகனை பிணையில் செல்ல அனுமதித்து யார் பிணைக்குப் பொறுப்பு என நீதியரசர் கேட்டதும் ஜி.ஜி. சற்றுமுன் விடுதலையான தந்தையை அழைதது 'தந்தை பொறுப்பு நிற்பார்' என்றார். தந்தையும் மகனும் விடுதலைப் பறவைகளாக வீடு சென்றனர். ஜி. ஜி. விமான நிலையம் புறப்பட்டார். ஆனல் 'பீஸ்' எதுவுமே வாங்கவில்லை.

பளை கொலை வழக்கு, ஆனைக்கோட்டை கொலை வழக்குஇன்னும்நூற்றுக்கணக்கான கொலை வழக்குகளில் எதிரிகளை மீட்டார். வடக்கில் மட்டுமல்ல, தெற்கிலும் பல கொலை வழக்குகள் ஜி. ஜி.யின் வாதத்திறமையால் தவிடுபொடியாகின.

'றஞ்சனி காப்ஸ்' வழக்கு மிக மிக பிரபலமானது. ஸ்கொட்லண்ட் யாட், கைரேகை நிபுணரையே திணறடித்தார். சதி வழக்கில் அரசாங்கத்தையே கதிகலங்க வைத்து, நீதிமன்றத்தையே செல்லுபடியாகாதென ஆதிட்டு மாதக்கணக்கில் தலைமறைவாக இருந்த மெல்லை கூட்டிவந்து சரணடையச்செய்தார்.

சட்டத்துறையில் பல நூறு வெற்றிகளைக்கண்ட மாமன்னன் ஜி. ஜி.யின் சேவை என்றென்றும் அழியா இடம் பெறும் என்பதில் ஐயமில்லை.

(வளரும்)





யாழ்ப்பாணத்தில் உள்ளவர்கள் ஒவ்வொருவரும் எவ்வித வாழ்க்கைத் தரத்தையுடையவர்களானலும்சரி தங்கள் அயராத உழைப்பிற்காக ஒவ்வொரு நாளும் அடுத்த நாளானது விடியும்வரை காத்திருக்கிறார்கள்.

அதேபோல், ஸ்திரமான அபரிமித இலாபத்திற்கு யாழ்ப்பாணத்திலுள்ள ஒவ்வொருவரும் எமது முதலீட்டுத் திட்டங்களில் தவராத நம்பிக்கை கொள்ளலாம். எமது முதலீட்டுத்திட்டங்கள் சூரியனைப்போல் பணத்துறையைப் பொறுத்த மட்டில் அளப்பரிய நன்மை பயப்பனவை. காரணம், வரையறையற்ற இலாபகரமான பன்முக கைத்தொழில் வளங்களால் வலுவூட்டப்பட்டுவருகின்றன. பத்தாண்டு காலத்திற்குமேலாக புத்திசாலிகளான முதலீட்டாளர்கள் குறைபாடற்ற பூரண காப்புடைய முதலீடுகளால் மேலான நன்மையடைந்துவந்துள்ளனர். இப்போது நீங்களும் இந்த நன்மைகளை அடையவென உங்கள் வசதியைக் கருதி உங்கள் அருகில் வந்துள்ளோம்.

| குறுகியகாலம் | நீண்ட காலம் |
|---|---|
| 11% | 16% |
| வட்டியுடன் ஈடுசெய்த முதலை இலகுவாக திருப்பிப் பெறும் வசதி. | நிலையான 2 வருடங்களுக்கு வட்டி - 12% 3வருடங்களுக்கு - 13% 4 வருடங்களுக்கு - 14% 5 வருடங்களும் மேலும் - 16% |

மாதாந்தம் வட்டி பெறலாம்



உறவுஸ் அன்ட் புரொபர்டி ட்ரேட்ஸ் லிமிட்டெட்

யாழ்ப்பாணம் - இல 2-3, நவீன சந்தை, பெரியகடை.

கொழும்பு ஏச்பிரி கட்டடம், பு. எஸ். சேனநாயக மாவத்தை கொழும்பு 8 த. பெ. 1077.

தொலைபேசி 94356, 91471. டெலக்ஸ் -1208.

RAVI - HPT - 523

## இருதய நோய்களும் தடுக்கும் முறைகளும்

ஆசிரியர்: டாக்டர் எஸ். இராசரத்தினம். விலை:ரூ.2-00

வயது எழுபத்தைந்துக்கு மேல் இருக்கும். நிமிர்ந்த நடை, ராஜ பார்வை, மதிப்புக்குரியவர்களால் 'ஐயா' என அழைக்கப்படுமளவுக்குத் தியாக உணர்வும் மேலெழுந்தவாரியாக மிதவாத அறிவும், ஆற்றலும், செயல்திறனும், மேலான அடக்கமும்......இந்த வயதிலும் மாலை நேரங்களில் அவர் கைப்பந்தாட்ட மட்டையை எடுத்துக்கொண்டு செல்லும்போது......ஆரோக்கியமான ஓர் இளைஞனாகவே காட்சியளிப்பார். எதைச் செய்தாலும் ஓர் திட்டம்–ஒழுங்கு அவரில் உண்டு. அருந்த வேண்டியது எது? அருந்தக் கூடாதது எது? என்பதை அறிந்தும் உணர்ந்தும் வாழ்கின்ற அவருக்கு மருந்து தேவைப்பட்ட சந்தர்ப்பம் மிகவும் குறைவே. போதைப் பொருளைத் தயாரிப்போரையும் கள்ளச்சாராயம் காய்ச்சுவோரையும், கைதுசெய்யும் துறையில் கடமையாற்றி ஓய்வு பெற்ற அவர் மது அருந்துவதில்லை.

முதலில் மது அருந்துபவரை, பின்பு மது அருந்துகிறது என்பது அவருக்கு தெரியும்.

டாக்டர் ச. இராசரட்ணம் அவர்கள் எழுதிய ''இருதய நோய்களும் அதைத் தடுக்கும் முறைகளும்'' எனும் அரிய சிறு நூலை வாசிக்கும்போது மேற்கண்ட பெரியவரின் உருவம் என் மனத்திரையில் நிழலாடியது. வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதன் காரணமாக மக்களால் தெய்வமாக எண்ணப்படுபவர்களின் வாழ்வு முறைகள் எமக்கு எவ்வளவு பாடங்களைப் புகட்டுகின்றன!

தமிழ் மொழியில் வைத்திய நூல்கள் வெளியாவது மிகவும் குறைவே!

1872-ம் ஆண்டில் மானிப்பாய், வைத்தியசாலையையும் அதோடு இணைந்த வைத்தியக் கல்லூரியையும் நிறுவிய டாக்டர் வில்லியம் போல்–சாமுவேல் கிறீன் எனும் பெரியார்களின் பின் மேலைத்தேய வைத்திய நூல்களைத் தமிழ் மொழியில் உள்ள பற்றின் காரணமாக, ஆக்கியும் மொழி பெயர்த்தும் அமைத்த பெருமை பேராசிரியர் அ. சின்னத்தம்பி (F. R. C. S.) அவர்களையும் Dr. நந்தி அவர்களையும் சாரும்.

இவ் வரிசையில் Dr. இராசரட்ணம் எழுதிய ''இருதய நோய்களும் அதைத்தடுக்கும் முறைகளும்'' எனும் நூல் சிறிது. ஆனல், ஆய்வின் முடிவுகளால் பெறப்பட்ட முடிவுகளும் அனுபவமும் சேர்ந்து ஒருமித்துப் பொதுமக்களுக்கு உதவுகின்ற வகையில் ஒரு நூலாக வெளியாகி இருப்பது மிகவும் பாராட்டுக்குரியது: அவரின பழுத்த வைத்திய அனுபவம் இந்நூலில் பிரதிபலிக்கிறது.

'ஈழநாடு' வாரமலரில் தொடர் கட்டுரையாக பல வாரங்கள் மலர்ந்து அநேக வாசக நேயர்களின் பாராட்டைப் பெற்ற இந்நூலின் விற்பனையால் வரும் வருமானமும் ஒரு புனித நோக்குக்கே பயன் படப்போவதாக முகவுரையில் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

இருதய நோய்களுக்கும் மனதுக்கும் உள்ள தொடர்புகள் இருதய வியாதியிலும் பார்க்க இருதய வியாதி எனப்பயப்படுவதால் ஏற்படும் தீமைகள் நோயாளரின் அவசரத்திற்கேற்ப அரைகுறையாக இரத்த அழுத்தம் கணக்கிடப்படலும் அதனல் ஏற்படும் தவருன முடிவுகளும், விளைவுகளும்—அளவுக்கு மீறிய உணவோடு உடற்பயிற்சியின்மை காரணமாக இதய நாடியில் கொழுப்புச் சேர்ந்துண்டாகும் வியாதிகளும், பாதுகாப்புகளும்—கோப்பி, தேநீர், மது, போதைப் பொருட்களால் விளையும் தீங்குகள் இன்னோரன்ன பல கோணங்களில் ஆராய்ந்து இருதய நோய்களின் காரணங்கள் தடுப்புகள் பாதுகாப்புகள் என்பன பற்றிய உண்மையான கருத்துக்களை அனுபவ ரீதியிலும் மேலைத்தேய வைத்திய வல்லுனர்களின் ஆய்வு முடிவுகளுடனும் சேர்த்து விளக்கியுள்ளார் ஆசிரியர்.

நிறைவுகள் பல நிரம்பியுள்ள இந்நூலில் எனக்குப் பிடித்த சில வரிகள்.

வைத்தியம் அடிப்படைக் காரணத்தை அறிந்து அதை அகற்றலாகும். டிஸ்பிரினும் நித்திரைக் குளிகைகளும் அல்ல, வைத்தியர் வாரி வழங்கும் ''ராங்குலைசேர்ஸ்'' Tranquillizers) தான் அல்ல! L,S D., கஞ்சா முதலியன இந்தச் சாந்தத்தைப் பெறவே குடிக்கின்றனர். நன்று சொன்னர் பிரித்தானிய வைத்திய சஞ்சிகை (B.M.J-8-2-76) ஆசிரியர் தன் கூற்றில், 'காப்பி குடிப்பதால் ஏற்படும் தீங்குகள் பற்றியும் அது மார்படைப்புக்கு காலாயிருப்பது பற்றியும் சென்ற தலைமுறை டாக்டர்மார் நன்கு உணர்ந்திருந்தார்கள். இன்றைய விசித்திரநடைமுறை மருந்துகளைப் பிழையாய் பிரயோகிப்பதும் தேவைக்கு அதிகமாய் அள்ளி அளப்பதும் சாதாரண நாளுக்கு நாள் நடப்புகளை மனதிலிருந்து மறையச்செய்து விட்டது''. இது வைத்தியருக்கு ஓர் சவுக்கடியாகவன்றோ அமைகிறது. சவக்காலையை நோக்கி எல்லோருமே நடந்து கொண்டிருக்கிறோம். வேலியம், லிபிறியம், நொபிறியம் செறிப்பாகச் மொகொடொன் ஓயாது விழுங்குகிறீர்களா? அவை அபின், கஞ்சா போன்றவை! அவைகளை வேலிக்கு மேலால் வீசி இறைவன் நாமத்தை ஓயாது ஒரு மனதாய் ஓதுங்கள். மருந்துகள் தரும் மயக்கம் இல்லாதே மனச்சாந்தி ஏற்படும். இகபர பலனும் நிரம்பக்கிடைக்கும்''

எங்கோ எப்போதோ வாசித்த ஒரு துணுக்கு நினைவுக்கு வருகிறது. வெவ்வேறு ஊரைச் சேர்ந்த இரு புளுகர்கள் சந்தித்தார்கள்.

''எங்கள் ஊரில் ஆஸ்பத்திரி இல்லை',.

''அப்படியா? ஏன்?,'

'எங்கள் ஊர்மக்கள் உணவு, உடை, ஒழுக்கம் இவற்றில் கட்டுப்பாடு உள்ளவர்கள். அங்கு நோய்கள் இல்லை.

'நல்லது, ஆனல் எங்கள் ஊரில் வைத்தியர்களே இல்லை. நோய்களும் இல்லை. மக்கள் இறப்பதும் இல்லை''

''நீ பொய் சொல்கிருய், சிறிது நேரத்தின் முன்பு ஒரு பிரமுகரின் பிரேத ஊர்வலம் எங்கள் இருவரையும் கடந்து சென்றதை நீ கவனிக்கவில்லையா?

இது உன் ஊர் தானே?

''ஓகோ! அதைச் சொல்கிருயா? அவர் தான் இந்த ஊரின் ஒரே ஒரு வைத்தியர்''

பொதுமக்கள் ஒவ்வொருவரிடமும் வைத்தியர்களிடமும் நூலகங்களிலும் இருக்கவேண்டிய நல்ல நூல்–விலையும் அதிகமில்லை. ரூபா 2 மட்டுமே. அறிவுடை உலகம் இந்நூலை ஆதரிக்கவேண்டும். அடுத்தும் Dr எஸ். இராசரட்ணம் அவர்களின் நூல்கள் இப்படி வெளியாகப் 'பெருமாள்' துணைநிற்க வேண்டும்.

—'விஸ்வபாரதி'

கவிதைச் சிறுகதை

## சண்டியன் பெறுமானம்

கவிஞர் அரியாலையூர் வே. ஐயாத்துரை

அடிபிடி சண்டையெனில்-பெரும்
ஆர வாரமெனக்கே!
குடிசையில் வாழ்ந்தாலும்-பல
கூட்டா ளிகளுளரே!

புள்ளிக ளானலும்-பெரும்
புரட்டர்க ளானலும்
கள்வர்க ளானலும்-என்னைக்
கண்டாற் கலங்குவரே!

ஆயுத வரிசையொடு-கை
ஆட்களும் அதிகமுளர்
போயொரு , சண்டையிலே-நான்
புகுந்தால் புகழ்தானே!

கடன்கொடுத் தோர் கேட்டால்-அவர்
கைகளை முறித்திடுவேன்
இடங்கொடுத் தோர் வந்தே-எனை
எழுப்பிட இயலாதே!

கையினில் பணமிலைத்தான்-ஒரு
காரியத் தில்முனைந்தால்
பையினில் பணம் நிறையும்-உடன்
பறந்திடும் பானத்திற்கே!

உண்டியில் உறைபானம்-எனக்
குறுதுணை தரும்ஞானம்
சண்டியன் பெறுமானம்-தினம்
தந்திடும் மதுபானம்

அடிகொடுத் தேபலரை-முன்
ஆட்டி அலைத்தேனே
தடிபிடிக் கின்றேனே-என்
தனிமையை உணர்ந்தேனே

குந்தி இருப்பதற்கோ-ஒரு
குந்துக்கும் வழியில்லை
கந்தைத் துணியுடனே-தெருக்
கானில் தவிக்கின்றேன்

கண்டோர் கலைக்கின்றர்-எனைக்
காறி உமிழ்கின்றர்
சண்டியன் முன்னே யான்-இனிச்
சண்டா ளன்தானே?

மனைவியை மக்கள் தமை-தினம்
வாட்டி வதைத்தேனே
அனைவரும் கைவிட்டார்-தினம்
அடியதை வாங்குகிறேன்.

## நமது நூல் நிலையம்

### வரப்பெற்றோம்

### காரைநகர்புதிய சாலை திறப்பு விழா மலர்

'மக்களின் தேவைகள் பல. அவற்றுள் முக்கியமானவை சில. ஆனல் எவற்றையேனும் இருந்த இடத்திலேயே பெற்றுவிடுவது சுலபமல்ல. இதனல் எமது வாழ்வில் போக்குவரத்துச் சேவை மிக இன்றியமையாததாக இருக்கின்றது. சுருங்கக் கூறின் ஒரு நாட்டின் வளர்ச்சியும் அந்நாட்டு மக்களின் முன்னேற்றமும் பெரும்பாலும் சிறந்த போக்குவரத்துச் சேவையிலேயே தங்கியிருக்கின்றது'

-இவ்வாறு இ. போ. ச' காரைநகர் சாலை அதிபர் திரு' ச. தியாகராசா மேற்படி மலருக்கு விடுத்துள்ள செய்தியில் குறிப்பிடுகின்றர்.

இ. போ. ச. தலைவர் திரு' ஜே. சி. ரி. கொத்தலாவலை, வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஆ. தியாகராசாஉட்பட இ. போ. ச. அதிகாரிகள் பலரின் ஆசிச் செய்திகள் மலரை அணி செய்கின்றன.

''மில்க்வைற்'' செய்தி ஆசிரியர் திரு. க. சி.குலரத்தினம் எழுதிய 'மரம் நாட்டும்பணி' என்ற கட்டுரையை வாசிக்கும் பொழுது மரம் நாட்டவேண்டுமென்ற சேவை மனப்பான்மையை ஊட்டுகின்றது.

இ.போ. ச. ஊழியர்கள் குறிப்பாக சாரதிகள், நடத்துநர்கள் செய்யும் தொழிலே தெய்வம்' என்ற மேலான நிலையில் சேவைசெய்தால் பொதுமக்கள் அவர்களைத் தெய்வம் என வணங்குவர்.

இம்மலரில் காரைநகர் இ. போ. ச. ஊழியர்கள்-பிரதிநிதிகளின் படங்களும் இடம் பெற்று மலருக்கு மெருகூட்டுகிறது.

—வாமா

### நூல்: அமரர் பண்டார நாயக்காவும் மொழிக் கொள்கையும்.

இலங்கையின் நிகழ்கால அரசியல் நிகழ்ச்சிகளுக்கு அடிப்படையாகவும் காரணமாகவும் உள்ளது மொழிப்பிரச்னையாகும். தமிழ் மக்களிடையிலும் வடக்குக் கிழக்குப் பகுதிகளிலும் அரசியல் சலசலப்பு அடைந்திருப்பதற்கும் இதுவே காரணமாக உள்ளது. இந்நிலையில் 'அமரர் பண்டாரநாயக்காவும் மொழிக்கொள்கையும்' என்ற சிறுநூல் வெளிவந்துள்ளது. உடுவில் தொகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மத்திய கமிட்டியின் சார்பில் ஆசிரியர் திரு. மாதகல் கந்தசாமி இந்நூலை யாத்து வெளியிட்டுள்ளார்.

இந்நூலுக்கு பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, நிதி-நீதி அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா, உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக, பொது நிர்வாக அமைச்சர் திரு.ரி.பி. இலங்கரத்தின, தபால் தந்தித்

(9-ம் பக்கம் பார்க்க)

சற்றேண்®
(பெந்தியோகாப்)

விதைத்து அல்லது நாற்று நட்டு 5-7 நாட்களுக்குள் களைகள் முளைக்குமுன்னரே உபயோகியுங்கள்.
நெற்பயிருடன் வளரும் எல்லாவித அகண்ட இலைப்புல், கோரைவகை, களைகள் ஆகியவற்றைத் தெரிந்து அழிக்கும் புதிய களைக்கொல்லி.
உங்கள் பயிர் விரைவாக வளரவும், உயர்ந்த அறுவடை அளிக்கவும் உறுதிப்படுத்துகிறது.


இலகுவாகக் கையாற் தூவக்கூடிய சற்றேண் 6% மணிகள் அல்லது தெளிக்கவசதியாக 50% ஈ. சி. யாக இரண்டு தயாரிப்புகளாகக் கிடைக்கிறது.
உபயோகிக்குப்போது எப்பொழுதும் நிலம் ஈரமாயிருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

ஒரு தரமான லங்கெம் தயாரிப்பு
® ஜப்பான் குமியாய் கெமிக்கல் இன்டஸ்றி கொ. லிட். இன் பதிவு செய்யப்பட்ட வியாபாரச்சின்னம்.
GRANT K & E 33

RIO (Jaffna) Daily 10-30, 4-45, 7-15, 9-45.
Carol White - John Castle
in
MADE
(Strictly adults)

Regal (Jaffna)
Today only
Daily 4-45, 7-00 & 9-30 P. M.
Roger Moore in
The Man Who Haunted Himself
(Color)
From: 28-2-77
LEONARD NIMOY, SUSAN HAMPSHIRE
in
BAFFLED

ஸ்ரீதர் [யாழ்ப்பாணம்]
எம். ஜி. ஆர். - மஞ்சுளா
சந்திரகலா -லதா
தினசரி 4 காட்சிகள் நடித்த
உலகம் சுற்றும் வாலிபன்
அடுத்த வெளியீடு! 3-3-77 முதல்
சிவாஜி (இருவேடம்) -- ஜெயலலிதா நடித்த
பாட்டும் பரதமும்

ராணி [யாழ்நகர்]
கமலஹாசன் -- தீபா - சாவித்திரி நடித்த
தினசரி 4 காட்சிகள்
அந்தரங்கம்

வின்ஸர் [யாழ். நகர்]
கமலஹாசன் - ஸ்ரீவித்யா
சுந்தரராஜன் ஜெயசுதா
தினசரி 4 காட்சிகள் நடித்த
அபூர்வ ராகங்கள்

ராஜா [யாழ். நகர்] கடைசி வாரம்
ஜெய்சங்கர் - நிர்மலா
தினசரி 4 காட்சிகள் நடித்த
தாய்க்கு ஒரு பிள்ளை

வெலிங்டன் [யாழ். நகர்]
எம்.ஜி.ஆர். - சரோஜாதேவி
தினசரி: 3 காட்சிகள், சனி, ஞாயிறு 4 காட்சிகள்
பணக்காரக் குடும்பம்

லிடோ [யாழ். நகர்]
ஏ. வி. எம். ராஜன் - லதா
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45. நடித்த
வீட்டுக்கு வந்த மருமகள்

மனோகரா [யாழ்ப்பாணம்]
5-வது "ஹவுஸ்புல்" வாரம்
காட்சி நேரங்கள் குறிப்பிட முடியாமைக்கு மன்னிக்கவும்.
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.
ராதாசலூஜா
நிர்மலா
வீரப்பா
நடித்த
சத்யா மூவிஸ்
இதயக்கனி
[ஈஸ்மன் கலர்]



## அமெரிக்கர்......

(5ம் பக்கத் தொடர்ச்சி)

கள் ஒரு இலையில் அல்லது செப்புப் பாத்திரத்தில் சாப்பாட்டை முன்வைத்துக் கொண்டு கால்களை மடித்து அமர்ந்துகொள்வார்கள். வலது கையால் சாப்பிடுவார்கள் கத்தி முள்அல்லதுகரண்டிகள் பாவிப்பதில்லை. கணவன் தனது பங்கை முதலில் எடுத்துக்கொள்ள அவர் மிச்சம் விடுவதை மனைவி சாப்பிடுவார். இங்குதான் படுப்பார்கள். அனேகமாக வித்தியாசம் காட்டிக் கொள்வதில்லை. நிலத்தில் ஒரு பாயைப் போட்டுக் கொண்டு பகலில் உடுத்தியிருந்த துணியால் மூடிக் கொண்டு படுப்பார்கள். பெரும்பாலும் ஆண்கள் இரண்டு அல்லது மூன்று யார் துண்டு துணியை இடுப்பில் சுற்றிக்கட்டிக்கொள்கிறார்கள். சில சமயங்களில் இன்னொருதுண்டை அல்லது சால்வையை மேலே போட்டுக் கொள்கிறார்கள். பெண்கள் இரண்டுமடங்கு நீளமான துணியை இடுப்பைச்சுற்றிக் கட்டி ஒரு முனையை மார்பின் மீதும்தோள்மீதும் அவைகளை பெரும்பாலும் மூடுவதற்காகப் போட்டுக்கொள்கிறார்கள்.

இருந்தாலும் கீழ் ஜாதிக்காரர்கள் உடம்பின் மேல் பகுதியை மூடிக்கொள்ளஅனுமதிக்கப்படுவதில்லை.

ஆண்கள் சில சமயங்களில் ஒரு சால்வையை அல்லது கைத்துண்டை தலையைச்சுற்றிக் கட்டிக்கொள்கிறார்கள். காலில் செருப்பு அணிகிறார்கள்.

இருபாலாரும் காதுகளிலும் விரல்களிலும் நகை அணிகிறார்கள். பெண்கள் ஏராளமான மணிகள், ஒட்டியாணம், காப்புகள், முடிப்பதக்கங்கள், பாதசரங்கள், மிஞ்சிகள் போன்றவற்றை அணிகிறார்கள். இவை அனைத்துமே பெரும்பாலும் தங்கம் அல்லது வெள்ளியால் செய்யப்பட்டவை. அதேசமயம் காதில் அணியும் தோடுகளிலும் விரலில் போடும் மோதிரங்களிலும் வைரக்கற்கள் பதிக்கப்பட்டிருக்கின்றன. இந்த நகைகள் பெரும்பாலும் அவர்களின் சொத்தில் ஒரு பகுதியாகும். விசேஷமாக பெண்களின் சொத்து இதுதான். இவைகளின் உருவ அமைப்பு மாறுவதில்லை. பரம்பரையாக இந்த வழக்கம் நீடித்து வருகின்றது.

வெஸ்லி
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவகுமார்-ஜெய்சித்ரா
தேன்சிந்துதே வானம்

நாகம்ஸ்
[சுன்னாகம்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
உபாலி — ஐயர்
கோமாளிகள்

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-45
சனி, ஞாயிறு 10-30
எம். ஜி. ஆர்.-ஜெயலலிதா
தனிப்பிறவி

# கோவில் ஆதனங்களை அரசு பொறுப்பேற்க வேண்டும்

## தேசிய மதகுருமார் கோரிக்கை

ஆணைக்கோட்டை, வெள்ளி கோவில்களுக்கு சொந்தமான ஆதனங்களை அரசாங்கம் பொறுப்பேற்கவேண்டும் என்று தேசியமதகுருமார்சபையினர் அரசிடம் கோரியுள்ளனர்.

கலாச்சார அமைச்சர் திரு. பி.பி. தென்னக்கோனிடம் இச்சபை விடுத்துள்ள கோரிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது.

இந்துக் கோவில்களில் கடமையாற்றும் அர்ச்சகர்களுக்கு போதியளவு சம்பளம் வழங்கப்படாததினால் கோவில் ஆதனங்களை சுவீகரீத்து உரிய சம்பளம் வழங்கவேண்டும் இந்தநாட்டிலுள்ள பிரசித்தி பெற்ற கோவில்களை அரசாங்கம் பொறுப்பேற்று நடத்த வேண்டும். இப்பிரசித்தி பெற்ற கோயில் வருமானங்களை அரசு எடுத்து சிறு கோவில்களை சிறந்த முறையில் நடத்த வழி செய்யவேண்டும். (இ)

......

## நான் இப்படித்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

'ஏயர் சிலோன்' நிறுவனத்துக்குப் 'பறந்து' திரிந்தேன். இசை விழா, ஆலய உற்சவ சீசனையால் ஆசனங்கள் என்றுமே முழுமையாக 'புக்' செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டது. ஜனவரி 9-ம் திகதி வரை இடம் கிடையாதென்று 'ஏயர் சிலோன்' சொல்லிவிட்டது. இதேவேளையில் கடைசி நேரத்தில் ரத்தாகும் ஆசனங்களை 'கொத்திக்'கொண்டு போவதற்காக இன்னொரு பட்டியலில் 'ஒரு கூட்டம்' காத்திருப்பதாகவும் 'ஏயர் சிலோன்' சொன்னது. இந்தப் பட்டியலிலும் இன்னும் ஒரு வார காலத்திற்கு இடமில்லை என்றும் சொல்லிவிட்டார்கள். ஆனால் இங்கு டிக்கட் வழங்கப்படுவதில் கடைப்பிடிக்கப்படும் முறையை புரிந்துகொள்ள பல நாட்கள் பிடித்தது.

'வாடிக்கையாளர்களுக்கு' முன்னுரிமை கொடுபடாமல், முன்பின் விமானத்தில் ஏறியே பழக்கமில்லாத, என்னைப் போன்ற 'ஸ்ரீமான்'களுக்கு எப்படி எடுத்தமாத்திரத்தே விமானத்தில் ஆசனம் தர முடியும்?

இ. போ. ச. பஸ்களில் 'சீற் றிசேர்வ்' பண்ணுவது போல 'ஏயர் சிலோன், விமானத்திலும் எவரது கைகால்களையும் பிடிக்காமலே றிசேர்வ் செய்து விடலாம் என்று நான் நினைத்தது தவறு என்பதைப் பின்னர்தான் உணர்ந்தேன்.

இவ்விதமாக 'ஏயர் சிலோனி'ல் தினமும் அலைந்துதிரிந்த பின்னர் டிசம்பர் 26-ம் திகதி மட்டில் ஜனவரி முதலாம் திகதிய 'சான்ஸ்' பட்டியலில் நானும் மனைவியும் சேர்க்கப்பட்டோம். இதுவும் விமான நிலையத்துக்குச் சகல ஆயத்தங்களுடனும் செல்லவேண்டும்; யாராவது கடைசி நேரத்தில் ஆசனத்தை ரத்துச் செய்தால் மட்டும் சந்தர்ப்பம் தரப்படும். இறைவன் புண்ணியத்தால் அந்தப்பட்டியலில் முதலிரண்டு ஆசனங்களில் நாம் பதிவுசெய்யப்பட்டோம்.

### விசேட விமானம்

இதற்கிடையில் டிசம்பர் 31-ம் திகதி பலாலியிலிருந்து திருச்சிக்கு விசேட விமானம் என்று ஒரு பேச்சு அடிபட்டது. ஓடிப்போனோம்! அதில் ஆசனங்கள் தேவையானவர்களை 'ஏயர் சிலோனில்' காத்திருக்குமாறு அறிவிக்கப்பட்டது. இருந்தோம்; நாம் மட்டுமல்ல இன்னும் சுமார் 50 பேர்! காலையில் 10மணிக்கு அங்கே வந்தவர்கள் இருந்த இடம் விட்டு அசையவில்லை. எவராவது ஒரு நிமிடம் கூட வெளியில் சென்றால் இந்த விமானத்தில் கிடைக்கவிருக்கும் இடம் பறிபோய்விடுமே!

பிற்பகல் 2-45 மணியளவில் கொழும்பு ஏயர் சிலோனிலிருந்து தகவல் வந்தது. விசேட விமான யோசனை கைவிடப்பட்டதாக! ஏமாற்றத்துடன் எல்லோரும் கலைந்தோம்.

மறுநாள்- 1977 ஜனவரி முதலாம் திகதி - 'சான்ஸ்' ஆசனத்தை எதிர்பார்த்து நானும் மனைவியும் பலாலி சென்றோம். காலை சுமார் 6-45 மணிக்கு ஒரு குரல், 'மிஸ்டர் காசிலிங்கம்' அது ஆண்டவனின் அழைப்புப் போலவே ஒலித்தது. விமானத்தில் ஏறிக்கொண்டோம்.

(தொடரும்)

## யாழ் இந்து மாணவர் ஒன்றிய கலைவிழா

யாழ்ப்பாணம், ஞாயி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி உயர்தர மாணவர் ஒன்றியத்தின் முதலாம் வருட கலைவிழா வருகிற 2-ம் திகதி பிற்பகல் நடைபெறவுள்ளது. கல்லூரி அதிபர் திரு. பொ. ச. குமாரசாமி நிகழ்ச்சிகளை ஆரம்பித்துவைப்பார். கே. எம். பஞ்சாபிகேசனின் நாதஸ்வர இசையுடன் விழா ஆரம்பமாகும். 'ஏனடி ஏங்குகிறாய்' என்ற தலைப்பில் நடைபெறவுள்ள கவியரங்கில் திருவாளர்கள் சி. மகேசன், சோ. வேணுகோபாலன், ந. திருநந்தகுமார், மா. வைகுந்தவாசன் ஆகியோர் கலந்துகொள்வர். காரை செ. சுந்தரம்பிள்ளை கவியரங்கிற்கு தலைமை வகிப்பார்.

நாட்டிய அரங்கில் இராமநாதன் நுண்கலைக் கல்லூரி மாணவிகள் கலந்துகொள்வர். வழக்காடு மன்றமும் நிகழும். குற்றவாளிக் கூண்டில் மாதவி என்ற தலைப்பிலான வழக்காடு மன்றத்தில் திருவாளர்கள்: சோ. வேணுகோபாலன், வே. சரவணபவன், க. ஸ்கந்தமூர்த்தி, ந. சிவலோகராசா ஆகியோர் கலந்து கொள்வர். காரை செ. சுந்தரம்பிள்ளையின் 'பாஞ்சாலிசபதம்' நாடகமும் இடம்பெறும். (ஆ)

## நமது நூல்நிலையம்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பு அமைச்சர் திரு. செ. குமாரசூரியர், ஸ்ரீ. ல. சு. க. உடுவில் தொகுதி பிரதம அமைப்பாளர் திரு. குமாரசாமி விநோதன் ஆகியோர் ஆசியுரை வழங்கியுள்ளனர்.

அனைவரும் வாசிக்கவேண்டிய முறையில் இந்நூல் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

—மா. சின்னத்தம்பி.

நெடுந்தீவு முன்னேற்றக் கழக மாநாட்டுச்

### சிறப்புமலர்.

அறிவுப்பொழில் வெளியீடு. ஆசிரியர்: வை. இராஜேஸ்வரன்.

நெடுந்தீவு முன்னேற்றக் கழக 10-வது வருடாந்த மாநாட்டை முன்னிட்டு அறிவுப்பொழில் நிறுவனத்தினர் வெளியிட்ட சிறப்பு மலர் கிடைக்கப்பெற்றோம். ஆசிச் செய்திகளும் மாநாட்டுச்செய்திகளும் பல்சுவைக் கவிதைகளும்இம்மலரை அணிசெய்கின்றன.

இம்மலரில் கழகச் செயலவை உறுப்பினரின் படங்களும் இடம்பெற்று மலருக்கு மெருகூட்டுகின்றன.

## சட்டமும் சமுதாயமும்—4

# பண்டைக்கால நீதிமன்றங்கள்

செ. சிறிக்கந்தராசா

வரலாறு என்று ஒன்றை எழுதிவைக்காத இனம் ஒன்று உலகத்தில் உண்டென்றால் அது தமிழினம்தான். தமிழினம் என்றேன், அதுவும் அத்துணைச் சரியன்று. ஏனென்றால் மேனாட்டாரது கருத்துப்படியும் ஆராய்ச்சிப்படியும் வரலாற்றையோ தோம்பையோ எழுதிவைக்கும் பழக்கம் இந்தியர் எவருக்குமே இருக்கவில்லை. இலக்கிய நாட்டம் மிக்கிருந்தமையால் அவர்கள் இலக்கியம் பலவற்றை இயற்றிப்போயினர். இவ்விலக்கியங்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் காணும் குறிப்புக்களிலிருந்தே நீதி நிருவகித்த தாபனங்கள்பற்றி அறியக்கிடக்கின்றது. பூசல்களையும் பிணக்குகளையும் தீர்ப்பதற்காக கோடேறும் பழக்கமோ வழக்காடும் நாட்டமோ இந்திய நாட்டாரிடம் இருக்கவில்லை என்பதை இலக்கியங்களிலிருந்து ஊகிக்கமுடிகிறது. இந்த ஊகத்துக்கு ஊன்றும் உரமும் தருவதுபோல மெகஸ்தெனிஸ் என்ற மேனாட்டாரும் இந்தியா பற்றிய தமது வரலாற்றுக்குறிப்பில் கூறியுள்ளார். மன்றிலே அதாவது நீதிமன்றிலே வழக்காடுவதற்கென்ற ஒரு வகுப்பார் பண்டைத் தமிழகத்திலோ பழம் பாரதத்திலோ இருந்தனர் என்பதற்குச் சான்றில்லை. ஆனால் பிற்றைக்காலத்து நீதி நூல்கள் சிலவற்றைப் பார்க்கும்போது வழக்குரைஞர் என்று ஒரு வகுப்பினர் தோன்றினர் என்று ஊகிக்கக்கிடக்கின்றது. வழக்குக் கட்சிக்காரராகஉள்ளவர்கள் தம்முடைய வழக்கை எடுத்துரைப்பதற்கு ஒரு பிரதிநிதியை அனுப்பினார்கள்என்ற செய்தி மேற்படி நீதி நூல்களில் காணப்படுகின்றது. இந்தப் பிரதிநிதிகளுக்குவழக்காளி கைம்மாறொன்றைக் கொடுக்க வேண்டும் என்றும் தருமசாத்திரங்களில்குறிப்புக்கள் காண்கின்றன. இவ்வாறு ஊதியம் பெற்று நீதிமன்றத்தில் வழக்கோதிய பிரதிநிதிகள் வழக்குரைஞர்களாக இருந்திருக்கலாம். ஆனால் இத்தகைய குறிப்பீடு எதுவும் தமிழிலக்கியத்தில் இருப்பதாகத் தெரியவில்லை.

### நீதியின் பிறப்பிடம்

ஆனால் குற்றம், நற்றம், தெற்றம் ஆகிய சொல்லாட்சிகள் தமிழிலக்கியத்திலே காணப்படுகின்றன. ''குற்றமிலனாய்க் குடிசெய்து வாழ்வானைச் சுற்றமாச் சுற்றும் உலகு'' என்ற குறளையும் ''ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும் எண்ணில் தவத்தான் வரும்'' என்ற குறளையும் நோக்குவார்க்கு இதுபுலப்படும். குற்றம் செய்தார் தண்டிக்கப்பட்டனரென்றால் அத்தகையதண்டனையைக் கொடுத்தவர் யார்? அல்லது கொடுத்தவர்கள் யார்?அல்லது கொடுத்த தாபனம் எது?அல்லது தாபனங்கள் யாவை?

''மன்னன் உயிர்த்தே
மலர்தலை உலகம்''

என்பது தமிழரின் கோட்பாடாக இருந்தமையால் மன்னனே நீதியின் பிறப்பிடமாகவும் இருந்தான். 'முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறை என்று வைக்கப்படும்.' என்ற குறளை நோக்க, மன்னனே நீதியையும் நிருவகித்தான் என்ற உண்மை புலனாகின்றது. முறைசெய்தவன் மன்னன் தான்? ஆனால் மன்னன் மட்டுமா முறை செய்தான்? நீதி நிருவகிக்கும் பணியை வேறு ஆட்களும் செய்தார்களா?

வடநாட்டு இலக்கியங்களைப் பார்க்கும்போது நீதிநிருவாகத்திலாகிய பணி அறங்கூறவையங்கள்போன்றநீதிமன்றங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்ததாகத் தெரிகிறது. நீதி நிருவகிப்பதற்கென ஐந்து உறுப்பினரைக்கொண்ட குழு ஒன்று இருந்ததாக சாதகக்கதையில் செய்தியொன்று காணப்படுகின்றது. ஊருக்கு ஊர் அறங்கூறவையங்கள்இருத்தல்வேண்டும் என்று அர்த்த சாத்திரம் என்ற நூல் ஆலோசனை கூறுகின்றது. வடமொழி நாடகமொன்றில் நீதிமன்றக் காட்சி (Court-Scene) ஒன்று வருவதாக அமைந்துள்ளது. நீதிபதிகள் அறங்கூறவைத்தார். ஆகியோரும் மனிதர்களேயாதலின் அவர்களும் கண்ணியமாகவும் நேர்மையாகவும் இருக்கின்றார்களா என்பதை அறியும்பொருட்டு ஒற்றர்கள் அமர்த்தப்படல்வேண்டும் என்றும் அர்த்தசாத்திரம் அறிவுரை கூறுகின்றது.

வடமொழி இலக்கியத்தில் காணப்படும் மேற்படி குறிப்புக்களை ஒத்த குறிப்புக்கள் தமிழ் இலக்கியத்தில் காணப்படுகின்றனவா என்பதை அடுத்த கட்டுரையில் காண்போம்.

---

## இப்படியும் இருக்கிறார்கள்

### இ. போ. ச. ஊழியர்கள்!

யாழ்ப்பாணம்,ஞாயிறு

இ.போ. ச. பஸ்ஸில் யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன் துறைக்குப் புறப்பட்ட ஒருவர் பஸ்ஸைவிட்டு இறங்கி வீட்டுக்குச் சென்றதும் பாக்கட்டைத் தடவிப்பார்த்துவிட்டு திகைத்துப் போனார்.

500 ரூபாய்க்குமதிகமான ரொக்கப்பணம், முக்கியமான தஸ்தாவேஜுகளுடனான தமது மணிபர்ஸ் காணாமல் போயிருந்ததே காரணம்.

இதுபற்றி அவர் இ. போ. ச. டிப்போ அதிகாரியிடம் புகார் செய்துவிட்டுத் தம் வேலைக்குப் போய்விட்டார். பஸ்ஸில் மணிபர்ஸ் காணாமல் போனால் திருப்பிக் கிடைக்குமா? போனது போனதுதான் என்ற முடிவோடு கடமையைக் கவனிக்கத் தொடங்கி விட்டார் அவர். அடுத்த நாட்காலை அவருக்குத் தகவல் ஒன்று கிடைத்ததின் பேரில் இ. போ. ச. பஸ் நிலையத்துக்குச் சென்றார். என்ன ஆச்சரியம்! மணிபர்ஸ் மாத்திரமல்ல அதிலிருந்த ரொக்கப்பணம் மற்றும் எல்லாமே அப்படியே இருந்தன! அவருக்கு இதை நம்பவே முடியவில்லை!

உண்மைதான்; அந்த மணிபர்ஸ் பஸ்ஸில் தான் கிடந்துள்ளது. அதனைக் கண்டெடுத்த பஸ் கண்டக்டர் மிகப் பொறுமையுடன் பஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம்கொண்டு வந்து ஒப்படைத்திருக்கிறார்.

மணிபர்ஸ் கிடைத்த மகிழ்ச்சியில் கண்டெக்டரின் நேர்மையைப் பாராட்டிய பிரயாணி கண்டக்டருக்குச் சன்மானம் கொடுக்க எவ்வளவோ முயன்று பார்த்தார். ஆனால் அந்தக் கடமை வீரர் ஒரு சதம்தானும் பெற்றுக் கொள்ள கண்டிப்பாக மறுத்துவிட்டார்.

மணிபர்ஸைத் தொலைத்துவிட்டுதிரும்பப் பெற்றவர் யாழ். லிடோ தியேட்டர் முகாமையாளர் திரு. பி. ஜோர்ஜ் யோசப் ஆவார். அதைக் கண்டெடுத்து ஒப்படைந்த கண்டெக்டர் யாழ். பஸ் நிலையத்தைச் சேர்ந்த ரத்தினம் விக்னேஸ்வரராஜா என்பவராவார்.

---

## சாவகச்சேரி தொகுதியில் மீண்டும் புதிய பஸ் சேவை

யாழ்ப்பாணம், ஞாயிறு

சாவகச்சேரித் தொகுதியில் மீண்டும் புதிய பஸ்சேவைகள் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தலைவர் திரு. ஜே. வி. ரி. கொத்தலாவல இ.போ. ச. வடபிராந்திய முகாமையாளர் ஜனாப் ஹமீம் ஆகியோர் கலந்துகொண்ட ஒரு மகாநாட்டில் சாவகச்சேரிப் பிரதிநிதி திரு.வி. என். நவரத்தினத்தின் யோசனைக்கிணங்க பின்வரும் சேவைகளை ஆரம்பிப்பதற்கு ஒப்புக்கொள்ளப்பட்டது.

யாழ்ப்பாணத்திலிருந்து எழுதுமட்டுவாளுக்கு ஒரு பஸ் சேவையும், கல்வித்திணைக்களம் இப்போது நல்லூரில் இருப்பதால் யாழ்ப்பாணத்துக்கும் கொடிகாமத்துக்கும் செம்மணி – நல்லூர் ஊடாக ஒருபஸ் சேவையும் யாழ்ப்பாணத்துக்கும் – கொடிகாமத்துக்கும் பாடசாலை மாணவர்களுக்கு இரண்டு சேவையும் நடைபெறும்.

## 'சிட்டுக்குருவியும் பருந்தும்'

பிரபல கவிஞரும் எழுத்தாளருமான 'சொக்கன்' அவர்கள் எழுதும் 'சிட்டுக்குருவியும் பருந்தும்' எனும் தலைப்பிலான தொடர் நாடகம் அடுத்த வாரம் ஆரம்பமாகின்றது.

## இன்று நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஞாயிறு

''மழலைத் தமிழ் அமிழ்தம்'' வெளியீட்டு விழா இன்று மாலை மானிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறுகிறது.

யாழ். லயன்ஸ் கழக உதவித் திட்டத்தின்கீழ் இந்நூல் வெளியிடப்படுகிறது. (இ)

## ச.ச. நிலைய வெள்ளிவிழா

யாழ்ப்பாணம், சனி

நாயன்மார்கட்டு பாரதி மன்றம் சனசமூக நிலையத்தின் வருடாந்தக் கூட்டத்தில் வெள்ளிவிழா உத்தியோகத்தராக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்–ஆ.ஆனந்ததாஸ்
உபதலைவர்– நா. துரைசிங்கம்
செயலாளர்–சி.மகேந்திரன்
உபசெயலாளர் –இ.உதயகுமார்
தனாதிகாரி–கி. ரவீந்திரன்.

ஐவர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (ஆ)

## கச்சியப்பர் குருபூசை

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். கொட்டடி ஸ்ரீ பாலஞானவைரவர் சுவாமி ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை கந்தபுராண சபை ஆதரவில் கச்சியப்பசிவாசாரிய சுவாமிகள் குருபூசை நடைபெறும்.

......

மாஸ்கோ, பெப் 26

மாஸ்கோவிலுள்ள உலகிலேயே மிகப் பெரியதென்று கருதப்படும் ஹோட்டல் ஒன்றில் ஏற்பட்டுள்ள தீ விபத்தினால் சுமார் 18 பேர் பலியாகியுள்ளனர்.

## விஞ்ஞான சங்கம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தின் ஆதரவில் இலங்கை விஞ்ஞான அறிவியல் பரப்புக் கனிஷ்ட சங்க யாழ். கிளை அங்குரார்ப்பணக் கூட்டம் இன்று காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும்.

---



## தவக்கால நற்சிந்தனை

''முறையோடு வாழ்கின்றவன் எவனோ, அவன் என்றென்றைக்கும் நிலையானதும், என்றென்றும் நிரந்தரமானதுமான நித்திய சுதந்திரத்தை அடையலாம். அதை அக்கறையோடு அடைய விரும்புகிறவர்கள் எவரோ அவர்களுக்குப் பரலோகத்தில் அந்தப் பாக்கியங்கள் பத்திரப்படுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன'' என்று வேதம் கூறுகிறது.

உலக இன்பம் நிலையானவையன்று. நெருப்பின் மேல் நீர்த்துளிகளாக மறைந்து போகும். பாறையின் மேல் அடிபட்ட கண்ணாடியெனச் சிதறுண்டுபோகும். அத்தகைய இன்பங்களையெல்லாம் வாழ்க்கையின் ஆணிவேர்களாகக் கருதி வாழும் நாம், பிறருக்கு என்ன நன்மையைத் தேடித்தந்தோம் என நினைத்துப் பார்த்தல் வேண்டும். ஆண்டவனின் படைப்புக்களாகிய கல்லும் கடலும். விண்ணும், மண்ணும், நீரும், நெருப்பும் நானிலத்தில்வாழும்எல்லாருக்கும் நன்மையையே அளிக்கின்றன. ஆனால் பேரறிவாம் பகுத்தறிவைப்பெற்ற நாம் மனிதரில் மனிதராகப் பிறந்து யாருக்கு எவ்வகையில் பயன்பட்டோம். மரமாய் வளர்ந்திருந்தாலும் மக்கள் தங்குவதற்கு நிழலாவது கொடுத்திருப்போம். மாடாய்ப் பிறந்திருந்தாலும் மழலைமொழி பேசும் குழந்தைச் செல்வங்களுக்குப் பாலாவதுகொடுத்து மகிழ்ந்திருப்போம். ஆறறிவு படைத்தமனிதவர்க்கத்தில்பிறந்த நாம், நம்மை நாமே காத்துக்கொள்வதிலேயேகவனத்தைச் செலுத்தி அதன் மேலேயே கண்ணும் கருத்துமாயிருந்து காலத்தைக் கழிக்கிறோம். எத்தனை நாட்களுக்கு இந்த இருட்பாதையில் சென்றுகொண்டேயிருப்போம்.

மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்பொறிகளையும் ஆண்டவன் கொடுத்தது எதற்காக, நல்லவற்றை உணர்ந்து, நல்லன பேசி, நல்லன பார்த்து, நல்லன நுகர்ந்து, நல்ல மொழிகளைக் கேட்பதற்கே சர்வேசுவரன் அவற்றை நமக்குப் படைத்தான். அவற்றை நன்நெறியில் செலுத்துகின்றோமோ என்பதைச் சற்று சிந்திக்க வேண்டுவதும் அவசியமன்றோ. (''ஞான ஒளி'')

---


## முக்கிய அறிவித்தல்

அல்வாய் மனோகரா சனசமூக நிலைய அபிவிருத்தி நிதிக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் 27-3-77 ஞாயிற்றுக்கிழமைக்கு பின்போடப்பட்டுள்ளது.

5578 செயலாளர்


## மரண அறிவித்தல்

### எஸ். ஈ. அல்பிரட்

யாழ். சம்பத்தரிசியார் கல்லூரியின் இளைப்பாறிய ஆசிரியர் எஸ். ஈ. அல்பிரட் காலமாகிவிட்டார். அன்னாரின் பூதவுடல் நாளை திங்கட்கிழமை (28-2-77) காலை 8 மணிக்கு யாழ். சென். மேரிஸ் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

54, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 5579


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanadu P. O. Box 49, Jaffna) Telegram: Eelanadu, Telephone 389. Registered as a Newspaper in Sri lanka.